உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே'


| | | |
|---|---|---|
| மலர் க | பிரபவ ஞு தை மீ — 1928 ஞு பிப்ரவரி மீ | இதழ் உ |


உள்ளுறை — பக்கம்


சைவமே சமரச சமயம் ... ... ... ... 25
திருப்பணி வேலையில் விளையுஞ் சில தீங்குகள் ... ... 32
நம்பியாரூரர் தேவாரம் .... ... ... ... 38
வாழ்த்துப்பா ... ... ... ... ... 41
எரி நிறைத்தனைய செல்வன் ... ... ... 42
சைவ சித்தாந்த மஹா சமாஜத்தின் 22-ஆவது கூட்டம் ... 45


---


பத்திராசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார்,

ஆசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

---

உதவிப் பத்திராசிரியர்

வித்துவான்

பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்


---


சைவ சித்தாந்த மகாசமாஜ காரியாலயம்,

92, வடதா முத்தியப்பன் தெரு,

சென்னை.

---

1928



FEB 1928 MADRAS

1927ஆம் டிசம்பர் 30, 31; 1928ஆம் ஜனவரி 1 ஆகிய திகதிகளில்

புதுவை மாநகரின்கண்

## ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளின் தலைமையிலே நடைபெற்ற

சைவசித்தாந்த மஹாசமாஜத்தின்

இருபத்திரண்டாம் ஆண்டு சபையிலே நிறைவேறியவை.

## 1928 ஆம் ஆண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட

## காரிய நிருவாக சபையார்

---

### தலைவர்

1. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் (திருப்பாதிரிப்புலியூர்)

### உதவித் தலைவர்

2. திரு. தி. நல்லசிவன் பிள்ளை அவர்கள் பீ. ஏ. பீ. எல். (சென்னை)
3. T. V. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் பீ. ஏ. பீ. எல். (தஞ்சை)

### காரியதரிசிகள்

4. திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் பீ. ஏ. பீ. எல். (சென்னை)
5. திரு. P. இரத்தினசபாபதிக் கவுண்டர் அவர்கள் (கோயமுத்தூர்)

### உதவிக் காரியதரிசி

6. திரு. C. இராஜரத்தின முதலியார் அவர்கள் (சென்னை)

### பொக்கிஷதாரர்

7. திரு. C. இரத்தின முதலியார் அவர்கள் (G. P. O. சென்னை)

### பத்திராசிரியர்

8. திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், தமிழாசிரியர், பச்சையப்பன் கலாசாலை.

### உதவிப் பத்திராசிரியர்

9. வித்துவான் பாரிப்பாக்கம் திரு. கண்ணப்ப முதலியார் அவர்கள்.

### அங்கத்தினர்

10. ஸ்ரீமான் திவான்பஹதூர் P. சுப்பையா முதலியார் அவர்கள் பீ. ஏ. பீ. எல். (*Retired District and Sessions Judge*)
11. திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள் "நவசக்தி" ஆபீசு, இராயப்பேட்டை.
12. திரு. பாலி. சு. நெல்லையப்பப் பிள்ளை அவர்கள், பத்திராசிரியர், "லோகோபகாரி", சிந்தாதிரிப்பேட்டை.
13. திரு. மயிலை. சிவ. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள், தமிழ்ப்புலவர், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல்.
14. திரு. கி. நாராயணசாமி முதலியார் அவர்கள், *Assistant Registrar, Co-operative Credit Societies.*
15. திரு. T. பாலசுந்தர முதலியார் அவர்கள், *Proprietor, Solden & Co.,* திருவல்லிக்கேணி.
16. திரு. S. கண்ணுசாமிப்பிள்ளை அவர்கள் பீ. ஏ.
17. திரு. A. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள், *Proprietor, Rukmani Cooker Company.*
18. திரு. S. தருமலிங்க நாயகர் அவர்கள், *Headmaster, Corporation School,* மயிலாப்பூர்.
19. திரு. C. S. சுவாமிநாத முதலியார் பீ. ஏ., *Ag. Commissioner for Rel. Endowments.*
20. திரு. E. N. தணிகாசல முதலியார் அவர்கள் பீ. ஏ. பீ. எல்.

### கணிதபரிசோதகர்

திரு. V. மாணிக்க முதலியார் அவர்கள்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"

மலர் க | பிரபவ ௵ தை ᏪᏪ 1928 ௵ பிப்ரவரி ᏪᏪ | இதழ் உ

## சைவமே சமரச சமயம்

[பத்திராசிரியர்]

சைவசித்தாந்தம் என்னும் நமது மதம் நினைவிற்கு எட்டாத பண்டைக் காலத்தில் தோன்றி நின்று திகழும் அரும் பெருஞ் சமயமாகும். அதனை இன்ன காலத்தில் இன்னார் தோற்றுவித்தார் என்று கூறுதற்கு இடமில்லை. சிலசமயங்களை இன்னின்ன கால எல்லைகளிலே தோன்றின என்று உறுதியாய் நிலையிட்டுரைத்து விடலாம்; சில சமயங்கள் அண்மைக் காலத்திலேயும் தோன்றின; சில இன்றும் புதிது புதிதாக எழுகின்றன; இனியும் பல எழுதல் கூடும்.

இந்நிலவுலகிலே பலதிறப்பட்ட மக்கள் வாழ்கின்றனர்; ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான அறிவும் விருப்பமும் ஆற்றலும் வாய்ந்தவராகக் காணப்படுவர். ஒரே வயிற்றிற் பிறந்தோரும் தம்முள் பெரிதும் அறிவு விருப்பங்களால் வேற்றுமைப்பட்டிருத்தலைக் காண்கிறோம். இங்ஙனம் உண்மை இருத்தலால் எல்லோரும் ஒரே வகையாக என்றும் இருத்தல் இயலாது. அதனால் மக்களுக்குக் காலந்தோறும் மதவேறுபாடுகள் உண்டாதலும் புதிய மதங்களில் பற்று நிகழ்தலும் இயல்பேயாம். நமது சைவ சித்தாந்தமும் தோன்றிய நாள் தொட்டு ஒரே வகையில் இருந்தது என்று கூறலாகாது; அதுவும் காலந்தோறும் அதனை அவலம்பிப்போர் அறிவு வளர்ச்சி மனப்பான்மை, நாகரிக முதிர்ச்சிக் கேற்றவாறு திரிந்தும் விரிந்தும் உயர்ந்தும் பரந்தும் வந்துகொண்டிருக்கிறது. எக்காலத்தும் ஒரே நிலையில் உயிருள்ள மதம் இருத்தல் இயற்கைக்குப் பொருந்தாது. அங்ஙனம் ஒரு மதம் இருக்குமெனக் கொள்ளின் அஃது உயிரற்று இறந்துபடும் என்பது உணர்வுடையார் யாவர்க்கும் தெற்றெனப் புலப்படற்பாலதே.

இனி, சமயம் என்பது யாதெனச் சிறிது ஆராய்வோம். எச்சமயமேனும் அது தோன்றுவதற்கு முன்பே அதன் உணர்ச்சி அரும்புதல் வேண்டும்; சமய உணர்ச்சி அரும்பிப் போதாகி மலர்ந்த பின்னரே சமயம் என்னும் கனி பழுப்பதாகும். ஆதலின் சமய உணர்ச்சி எப்பொழுது உண்டாகுமென்பது ஆராயற்பாற்று. இவ்வகன்ற வையகத்தே வாழும் உயிர்களெல்லாம் இன்பத்தை விழைதலும் துன்பத்தை வெறுத்தலும் செய்கின்றன. ஒவ்வொன்றும் விரும்புமாறு இன்பமே பெருகிவிடுமாயின், அவை சிறிது காலம் இனிது கழிக்கலாம்; ஆனால் உலக இயற்கை அங்ஙனம் இல்லை. எவ்வுயிரும் இன்பத்தை மட்டும் நுகர்தல் இல்லை; இன்பமும் துன்பமும் கலந்தே வருகின்றன. 'இன்புண்டேல் துன்பமுண்டு.' ஒரு சிலர்க்கு இன்பம் பெருகியும் துன்பம் அருகியும் இருக்கும்; அவ்வாறன்றி வேறு சிலர்க்குத் துன்பம் பெருகியும் இன்பம் அருகியும் வரும்; எவ்வாற்றானும் இன்பத்தை மட்டும் துய்க்கும் உயிர் யாதும் இல்லை. எழுநிலை மாடத்து அரியணைமேல் அமரும் மன்னர் மன்னனும் இன்பத்தையே துய்த்தல் இல்லை. அங்ஙனம் ஒருவன் இன்பத்தையே துய்க்கின்றான் எனக் கொள்ளினும், எத்துணை நாள் அவன் அதனை எய்தல் கூடும். அவன் நூறாண்டு வாழ்ந்தானெனினும் ஒரு நாள் இறத்தல் ஒருதலையே; அவன் இன்பத்துக்கு உறையுளென மதித்து மகிழ்ந்திருந்த காதலிற் சிறந்த மனைவியும் இறப்பாள்; தனது கண்மணியினும் அருமையாகக் காத்து வந்த மைந்தனும் தன் கண்முன் இறப்பினும் இறக்கும்; அன்றியும் தன் ஐம்புலனுக்கும் [illegible] சுவை தந்த மனைவியின் எழில் நலனும் இளமைச் செல்வியும் மெல்லென மறைந்து போம்; குயிலொத்த கூந்தல் கொக்கொக்க நரைக்கும்; வேற்கண்ணள் கோற்கண்ணள் ஆவள். சாவா மருந்தாம் அமிழ்து விளை தீங்கனி பெற்ற அவ்வைப் பிராட்டியையுங் காணோம்! சிரஞ்சீவிப் பதம் பெற்ற செல்வர் பதச்சுவடும் காணோம்! காயகற்பந் தேடி உழன்றவரும் நெஞ்சு புண்ணாகி நொந்தயர்ந்தனரே! என்செய்வேம்? 'நான் இறந்தால் எங்கே செல்வேன்? பிறத்தற்கு முன் எங்கே இருந்தேன்? நான் இவ்வுடம்பைப் பெற்று இவ்வுலகில் உலாவுதற்குப் பொருள் உண்டா? பொருள் இருப்பின் அஃது என்னை? அதனை யான் எவ்வாற்றான் உணரமாட்டுவேன்?' என்றின்னோரன்ன வினாக்களைத் தனக்குள் கேட்டுத் தெளிய முயல்வதே உண்மையான சமய உணர்ச்சி. இவ்வுணர்ச்சி முறை முறையே வளர்ந்த பின்னரே ஒருவன் சமயப் பிரவேசத்துக்கு உரியவனாவான். அங்ஙனம் இல்லாதவன் எச்சமயத்தைச் சார்ந்தவனாயினும் எச்சமய ஒழுக்கத்தைக் கைப்பற்றினவனாயினும் அவன் சமய நெறி, வேட்கையே அறியாத சிறுவர் மணம் புரிந்து கொள்ளுதல் போன்ற ஒரு விளையாட்டுச் செய்கையை ஒக்குமல்லது அதனானே அவன் பயனடைதல் இல்லை என்க.

18747

இனி, மக்கள் அறிவு வரம்புடையது; அவர் ஆற்றல் வரம்புடையது; அவர் வாழ்நாள் குறுகியது; அவருக்கு வாழ்க்கையிலே நேரும் இன்னல்களும் இடையூறுகளும் பலப்பல. ஆகலான் யாதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்து ஒழுக விழைவது மக்கட்கு இன்றியமையாத பண்பாகவே உளது. துணையில்



லார் துணையைத் தேடுதலும் வலியற்றார் வலிவைப் பெற முயல்வதும் இயல்பே. மக்கள் தம்மினும் அறிவும் ஆற்றலும் அழகும் இன்பமும் அருளும் உடைய ஒரு செம்பொருளை அவாவி அதன் வாயிலாகத் தமது குறைபாட்டை ஒழித்துக் கொள்ள எண்ணுகின்றனர்; அப்பொருளின் அருளைப் பெற்றுத் தமது துன்பத்தைத் துடைக்கக் கருதுவர்; இங்ஙனம் தோன்றும் உணர்ச்சியே கடவுளுணர்ச்சி ஆகும். அக்காலமே தெய்வம் உண்டென்பதோர் சித்தமுண்டாகும் காலமாகும். கடவுள் ஒருவர் உளர் என்னும் உறுதி ஏற்பட்டால் அன்றி மக்களுக்கு ஒரு நிலை அகப்படாது. கடவுள் இல்லையென நாத்திகம் பேசுவோரும் அரிய பெரிய குணங்கள் சிலவற்றைத் தமது கொள்கைகளாகக் கொண்டு அவற்றிற்கு இசைய ஒழுக வேண்டுமென்பர். இதனால் பெறப்படுவது யாது? கடவுள் என ஒரு தலைவரைக் கொள்ளுதலோ அன்றிச் சில தலைமைப் பண்புகளை தமது ஒழுகலாற்றுக்கு அமைத்துக்கொள்ளுதலோ ஆகிய இவ்விரண்டனுள் யாதேனும் ஒன்று இன்றி மக்கள் உயிர் வாழமுடியாதென்பது தெளிவாகும்.

இனிச் சமயங்களோ பல. இவை ஒன்று உரைக்குமாறு மற்றொன்று உரைத்தல் இல்லை. ஒவ்வொரு சமயத்தினரும் தம் தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைவர்; எல்லாருக்கும் தனித்தனி மறைகளும் மறைமொழிகளும் உண்டு; எல்லாருக்கும் கொள்கைகள் உண்டு; எல்லாச் சமயத்தும் அற்புதங்கள் நிகழ்ந்ததுண்டு; எல்லாருக்கும் இறைவன் திருவருள் புரிந்த கதைகள் அளப்பில உண்டு. இவ்வாறாயின் இவற்றுள் எச்சமயம் மெய்ச்சமயம், எப்பொருள் மெய்ப்பொருள், எந்நூல் மெய்ந்நூல்? என்பன தெளிதற்பாலன. ஒரு சமயத்தார் மற்றொரு சமயத்தைப் பொய்யெனக் கண்டித்து விடுதல் அரிதன்று. எச்சமயத்தாரும் தமது சமயத்தை மெய்ச்சமயம் எனக் கருதுதற்கும் கூறுதற்கும் உரிமை யுள்ளவரே; ஆனால் அப்படிக் கூறிக் கொள்வதனாலேயே ஒருசமயம் மெய்ச் சமயமாகத் திகழ்தல் கூடுமோ? ஒரு சமயம் பொய் யெனற் கூடுமேல் மற்றொரு சமயத்தை மட்டும் மெய்யெனல் எவ்வாறு? ஒன்றற்குப் பொருந்துங் காரணமே மற்றொன்றற்கும் பொருந்தும்.

பின்னை வழிதான் யாது என்றால், எல்லாச் சமயங்களும் மெய்ச் சமயங்களே. பொய் என்பதும் மெய் என்பதும் ஒன்றை ஒன்று ஒற்றித்து நோக்கும் நோக்கத்தான் கூறப்படுதலே அன்றித் தனித் தனியே யாதும் பொய்யுமன்று; மெய்யுமன்று. ஒரு சமயம் அதனைக் காட்டினும் சிறந்த அறிவும் போற்றலும் படைத்தவர்களுக்கே அறியப்படும் நிலையில் விளங்கும் வேறொரு சமயத்தை நோக்கப் பொய்ச் சமயம் என்று வழங்கப்படும்; அவ்வாறே ஒவ்வொரு சமயமும் ஒன்றை ஒன்று நோக்க மெய்யும் பொய்யுமாகத் திகழும். எல்லாச் சமயங்களும் இறைவன் அருளாலே அன்றி உலகில் நிலை பெறமாட்டா; அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு திறத்தினருக்கு ஒவ்வோர் காலத்தே வேண்டப்படுவனவே. ஒவ்வொரு சமயமும் படிப்படியாக மேனிலையிற் கொண்டு செலுத்தும் பான்மை உடையனவாம். இதனால் எச்சமயத்தையும் இகழ்தல் நன்றன்று. சமயத்தை இகழ்தல் தெய்வத்தை இகழ்தலே ஆதலின் 'தெய்வ மிகழேல்'

எனத் தமிழ் மூதாட்டியாரும் பணித்தார். இக்கருத்தை மிக விளக்கமாக அழகு ததும்பத் திருவருட்பா ஆசிரியர்,

‘ பெருகியபேர் அருளுடையார்
அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகைஎன் கணவர்திருப்
பேர்புகலென் கின்றாய்
அருகர்புத்த ராதிஎன்பேன்
அயனென்பேன் நாரா
யணனென்பேன் அரனென்பேன்
ஆதிசிவ னென்பேன்
பருகுசதா சிவமென்பேன்
சத்திசிவ மென்பேன்
பரமமென்பேன் பிரமமென்பேன்
பரப்பிரம மென்பேன்
துருவுசுத்தப் பிரமமென்பேன்
துரியநிறை வென்பேன்
சுத்தசிவம் என்பன்இவை
சித்துவிளை யாட்டே ’.

என்றும்

‘ சிற்சபையில் நடிக்கின்ற
நாயகனார் தமக்குச்
சேர்ந்தபுறச் சமயப்பேர்
பொருந்தவதோ என்றாய்
பிற்சமயத் தார்பெயரும்
அவர்பெயரே கண்டாய்
பித்தரென்றே பெயர்படைத்தாற்
கெப்பெயர் ஒவ்வாதோ
அச்சமயத் தேவர்மட்டோ
நின்பெயரென் பெயரும்
அவர்பெயரே எவ்வுயிரின்
பெயரும்அவர் பெயரே
சிற்சபையில் என்கணவர்
செய்யும்ஒரு ஞானத்
திருக்கூத்துக் கண்டளவே
தெளியும்இது தோழி.’

என்றும் அருளிச்செய்த சுவைத்தொறும் இனிக்கும் செய்யுட்களால் எடுத்து விளக்கி யுள்ளது காண்க. இப்பேருண்மையினை எல்லாச் சமயமும் ஒப்புக்கொள்கின்றனவா? இல்லை, இல்லை. ஆனால் நமது சைவ சித்தாந்தம் இவ்வுண்மையினை முற்றும் ஏற்றுக்கொண்டு விட்டது; இதுதான் உண்மை என்றும் உலகிற்கு வெளிப்படையாக நிலையிட் டுரைத்தது.

‘இயல்பென்றந் திரியாமல் இயமம் ஆதி
எண்குணமுங் காட்டிஅன்பால் இன்பம்
பயனருளப் பொருள்கள்பரி வாரமாகிப் [ஆதி
பண்புறவுஞ் சோபான பட்சங் காட்டி
மயலறுமந் திரஞ்சிட்சை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
அயர்வறச்சென் னிலையில்வைத் திராசாங்கத் [தில்
அமர்ந்தது வைதிகசைவம் அழகிதந்தோ.’

எனவரும் செம்புலச் செல்வராகிய தாயுமான சுவாமிகள் அருமைப் பாடலால் இஃது உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கும்.

இனி ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு வகையான நிலையிலே யுள்ள மக்கட்கே அன்றி உண்மை வேட்கை கொண்ட மக்கள் ஒரே நிலையினராயினும் ஒவ்வொரு காலத்திலே அவருக்கும் இன்றியமையாத தாகும். இதனை இன்னும் சிறிது விளக்குவோம். முதல் முதல் இவ்வுலகுக்கு முதற்கடவுள் ஒருவர் உண்டா இன்றா என்னும் ஆராய்ச்சி இன்றியே ஒழுகும் ஒருவன் நாத்திகனவன்; பின்னர் ஆராய்ந்து முடிவாக மற்றொருவன், “கடவுள் என்றொரு அறிவுப்பொருள் இல்லை; ஆனால் உலகத்திலே நாம் ஒருவருக்கும் தீமை செய்யாது நன்மை செய்து வாழ்தல் வேண்டும்; இவற்றைவிட வேறொன்று மில்லை; அறத்தை அறிதலே சாலும். அவ்வறங்களின் வழி திறம்பாது ஒழுகுதலே கடைப்பிடி,” என்று இங்ஙனம் கூறுவனாயின் அவன் நாத்திக சமயத்தானவான். ஏனெனின் இவன் கடவுள் உண்மையைக் கருத்திற் கொள்ளாவிடினும் தனக்



கென அறம் ஒன்றை வைத்துக் கொண்டு அவ்வழி யொழுக உடன்பட்டு ஒரு நிலையில் நிற்கின்றான். ஆதலின் இவன் ‘அறத்தான் வருவதே இன்பம்’ என்பது கொண்டு அவ்வாயிலானே அவ்வின்பத்தை நுகர்வதற்கு அவா வுடையவனாய் அவ்வளவிலே நின்றுவிடுவன். வேறொருவன், “ அற்றன்று ; அறமே இறைவன்; அறத்தை அறிதலே இறைவனை உள்ளபடி உணர்தல்; அறத்தின்வழி ஒழுகுதலே இறைவனைத் தொழுதல்; மறமனைத்தும் சிறிது சிறிதாக நீங்கி அறத்திற்கே உடல் பொருளாவியை இன்பத்துடன் விடுதலே முடிவான பேரின்பம்,” என அறத்துக்கு உயிர் கொடுத்துக் கூறி முடிப்பன்.

இனி, ஒரு சாரார், “ கடவுட்பொருள் ஒன்றுண்டெனற்கும் இல்லை ; இல்லையெனற்கு மில்லை. ஆனால் நாம் இயற்கையைக் காணுந்தோறும் நமது அறிவு அதன் அளப்பரும் பேரழகிலே ஈடுபட்டு இன்பம் துய்த்தல் யாவரும் கண்கூடாகக் கண்டது. அவ்வியற்கையே இவ்வுலகைப் படைத்தும் காத்தும் அழித்தும் வரும்; அதனோடு ஒன்றுபட்டு வாழ்தலே நாம் செயற்பாலது,” எனத் துணிவர். இத்தகையார் இயற்கையிலே விளங்கி நமது புலன்களைக் கவரும் அழகு ஒன்றையே நோக்கி நோக்கி வியந்து வியந்து அதனால் வரும் இன்பத்தைப் பெற்று அவ்வளவிலேயே அமைவோ ராவர். இவர் அழகே கடவுளின் வடிவெனக் காண்பர். பிறிதொரு சாரார், நாம் எல்லாவற்றையும் அறிதற்கும் அறிந்தவற்றை அடைதற்கும் கருவியாவது அறிவே ; இவ்வறிவு மேன்மேலும் முறுகி வளருந்தோறும் அதனான் வரும் இன்பம் உடன் வளர்ந்து வருவதாதலின் முற்றறிவு பெறுதலே அமையும் ; அவ்வறிவே பரம்பொருள் என்ப. இன்னும் ஒரு சாரார், “ அங்ஙனம் அன்று ; எல்லா உயிர்களும் இன்பத்தைப் பெறவே முயலுதலும் அதனைச் சிறிது பெற்றதும் ஆறுதலடைதலும் காண்கின்றோம். அதுவே எல்லா உயிர்களின் மாட்டும் ஒத்து நிகழும் உணர்ச்சி; அஃதன்றிப் பிறிதில்லை. பெற்றோர் தாம்பெற்ற அருமை மகவை அணைத்து, உச்சி மோந்து முத்தமிட்டுக்கொள்ளும் போதும் காதலர் இருவர் கருத் தொருமித்துத் தேனினும் இனிய அன்பு மொழிகளைக் கலந்து பேசுந்தோறும் கடவுள் வெளிப்படுவர். இவையிற்றால் விளையும் இன்பம் இறைவனுடன் இசைந்த இன்பமே” என்பர். இவ்வாறன்றி ஒருதிறவர், “ இவையனைத்தும் பொருள் அல்ல ; எவ்வுயிருக்கும் அன்பு செலுத்தலே அமையும் ; அன்பே இறைவன் ; அன்புள்ள இடத்தே இறைவன் உண்டு ; இன்பமும் உண்டு. இதனினுஞ் சிறந்தது யாதொன்று மில்லை,” என விடுப்பர்.

இவர் கூறுவன வெல்லாம் உண்மையே. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியை மட்டும் விரித்து விளக்குகின்றனரே அன்றி எல்லாவற்றையும் ஒருங்கே தெரிந்து கூறும் ஆற்றல் இவர்பால் காணப்படவில்லை. இங்ஙனமே மக்கள் வழிபடும் ஒவ்வொன்றும் இவற்றுள் ஒன்றோ அல்லது இரண்டு மூன்று கலந்தோ காணப்படும். நமது நாட்டிலேயும் மேனிலைக்கட் செல்வதாய சமயவொழுக்கங்களிற் செல்லுவோரும் கன்னிகை, பூவாடை எனச் சில சிறு தெய்வ வழிபாடுகளையும் ஊடேயூடே செய்து போதருகின்றனர். கன்னிகை

யாக இறந்துபோன பெண் கட்டழகும் கட்டிளமையும் வாய்ந்தவளாக இருத்தலாலும் அவள் மணம் புரிந்துகொள்ளாமையான், அவள் உலகத்தே வெறுந் தூய்மையின் இழப்பாகக் கருதப்படும் மணவாழ்க்கை அவட்கு இன்மையானும் அவ்வாற்றானே உள்ளம் கவரப்பட்டு அவ்வழிபாடு புரியலாயினர். அங்ஙனமே பூமணத்துடன் கணவனுக்கு முன் இறந்த பெண் கைம்மைத் துன்பத்தை இழத்தலான் அவளது திருவை வியந்து மக்கள் கொண்டாடியதே பூவாடை வணக்கமாகும். இவ்வாறே மேலே காட்டப்பட்ட அறம், அழகு, அன்பு, இன்பம் முதலிய பண்புகள் சிலவும் பலவும் ஒருவரிடத்தே காணப்படுமாயின் அவரைப் பாராட்டி அவர் உயிருடன் இருக்கும் பொழுதே வியந்து தொழுவதும் இறந்த பின்னரும் அவரை நினைந்து வழிபடுவதும் மக்கள் மாட்டுக் காணப்படுவதோர் இன்றியமையா ஒழுக்கமாம். இதனையே வீரவழிபாடு என்ப. வீரர் வெறும் உடல் வலியான் மட்டும் முதல் முதல் பெரியாராகக் கருதப்பட்டுப் பின்னர்க் கல்வி, அறிவு, ஒழுக்கம், அன்பு, கொடை முதலியவற்றானும் சேர்த்துக் கருதப்படுவோ ராயினர். ஆதலால், புல்லர் கல்வி வீரரென்றும் வள்ளியோர் கொடைவீரர் என்றும் இங்ஙனம் வழங்கப் பெறுவா ராயினர்.

இதுபோன்றே மக்கள் அளக்கலாகாப் பெருமையும் தோற்றமும் உடைய மலைகளையும், பரந்து ஆழ்ந்த கடலையும், முன்னர் வெளிப்படாது, கடைந்த வழித் தோன்றும் நெருப்பையும், பரிய மரங்களையும் பெரிய மாட கூடங்களையும் ஒரு நொடியில் அழிக்க வல்ல ஆற்றல் வாய்ந்த காற்றையும், அண்ணாந்து நோக்குந்தோறும் விரிந்து அகன்ற நீலவானத்தையும் வழிபடுவாராயினர். இன்னும் விடியற்காலத்தையும் செக்கர் வானத்தையும் பிறைமதியையும் முழுமதியையும் செங்கதிர்ச் செல்வனையும் வழிபட்டு வருவர். உலக முழுவதும் காணக் கிடக்கும் அநாகரிக மாக்கள் முதல் நாகரிகம் முதிர்ந்த மக்கள் ஈறாகக் கொள்ளப்பட்டு வரும் வழிபாட்டு முறைகள் யாவும் இக்கூறியவற்றுள் ஏதேனும் ஒன்றன்கண் அடங்கிவிடு மென்பதை ஆராய்ந்து தெளிக. மதக்கொள்கைகள் மாறி மாறி வருவதற் கேற்பவே அவ்வம்மதக் கடவுளருடைய இயல்புகளும் அருட் பண்புகளும் மாறி மாறி வரும்.

உண்மை இங்ஙனமாயின், எம் மதத்தை நாம் சம்மதமாகக் கொள்வது? என்பதே தேர்தற் குரியது. எல்லா மதங்களும் ஒவ்வொரு நிலைக்கு வேண்டப்படுவதேல் எல்லாச் சமய உண்மைகளையும் ஒருவன் கைப்பற்றி ஒழுகுவதா? அன்றி ஒவ்வொரு சமயத்தும் புகுந்து புகுந்து வெளியேறுவதா? என்னின் அற்றன்று; எச்சமயம் எல்லாச் சமய உண்மைகளையும் தன்னகத்தே கொண்டு மிளிருமோ அச்சமயம் ஒன்றனையே கைக்கொண்டு அவ்வாறு ஒழுகின் அதுவே பெறத் தக்க பேற்றை அளித்துவிடும் என்பது. அற்றேல் எல்லாச் சமய உண்மைகளும் ஒரு சமயத்தே காணப்படுமாயின் அச்சமயம் ஒரு தனிச் சிறப்பை அடைய மாட்டாது; ஏனெனின் அதற்குத் தனக்கென ஒன்று மின்மையின்; அங்ஙனம் உண்டெனப்படினும் பல சமயங்களோடு ஒன்றாகும் எனின், அற்றன்று; எல்லாச் சமயங்களையும் தன்னகத்தே அடக்கிக் கொள்ளும் வியாபக இலக்கணமும் எச்சமயத்தையும் இஃது ஆகும் அஃது



ஆகாது என்று கூறும்பிணக்கு இன்மையும் பல வேறு சமயங்களையும் தனக்குச் சோபன மார்க்கமென ஏற்றுக்கொள்ளுதலும் இச்சமயங்களால் அறியப்படாத நுண்பொருள்களை அறிந்து அவற்றை மேற்கொண்டிருத்தலும் ஆகிய இத்தகைய சிறப்பியல்புகளால் அஃது எச்சமயத்துக்கும் மேலாகச் சிறந்ததுமாய்ப் பல சமய சமுதாயமு மின்றாய்த் தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்த பேருண்மைச் சமயமாம் என்பது தெளியப்படும். இவ்வுண்மையினைத் தலைசிறந்த சைவ சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றாகிய சிவஞான சித்தியாரின்கண் வரும்,

‘ஓதுசம யங்கள் பொருள்
உணரும் நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாம
லுளபலவும் இவற்றுள்
யாதுசமயம் பொருள்நூல்
யாதிங் கென்னின்
இதுவாகும் அதுவல்ல
தெனும் பிணக்கதின்றி
நீதியினான் இவையெல்லாம்
ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம்
அதுசமயம் பொருள்நூல்
ஆதலினான் இவையெல்லாம்
அருமறை ஆகமத்தே
அடங்கிவிடும் அவைஇரண்டும்
அரனடிக்கீழ் அடங்கும்.’

என்னும் அருமைச் செய்யுளாலும் இனிதுணர்க

இந்துசமயத்தின் சிறப்பியல்புகளென மேனாட்டு வித்தகராகிய மாக்ஸ்மூல பண்டிதர் அவர்கள் தாம் எழுதிய நூலிலே குறிப்பிட்டவை அனைத்தும் சைவ சமயத்துக்கு உரிய கொள்கைகளாக அச்சமய சாத்திரங்களிலும் தோத்திரங்களிலும் முழங்கப்பட்டிருத்தல் நோக்கற்பாலது. இந்து சமயம் எனக் கூறப்படுவதொரு சமயம் இன்றெனினும் எல்லாச் சமய உண்மைகளையும் பொதுவாகக் கொண்டு பார்ப்பின் அதனை இந்து சமயமெனக் கொள்ளலாமெனப் பிற்காலத்து ஞானியாராகிய விவேகாநந்தர் முதலியோர் கூறிய இலக்கணம் எல்லாம் சைவ சமயத்திலே அடங்கி இருத்தலின் இதனையே ‘இந்து சமயம்’ எனக் கூறல் இழுக்குறாது என்க. இப்பெற்றி இதற்குண்மை அறிந்தன்றே, அருணந்தி சிவனார் இதனைச் ‘சமயம்’ என்றே மேலைத் திருப்பாசுரத்திலே அடைமொழி ஒன்றும் இன்றி அருளிச் செய்வாராயினர். இக்கருத்துப் பற்றியன்றே தாயுமானவரும் ‘சைவ சமயமே சமயம்’ என்றும் அதனையே ‘சன்மார்க்கம்’ என்றும் ‘சமயாதீதம்’ என்றும் ‘சமரசம்’ என்றும் வாயாரப் புகழ்ந்துரைத்தனர். அவருக்குப் பின் விளங்கிய இராமலிங்க சுவாமிகளும் இச் சமயத்தினையே ‘சமரச சன்மார்க்கம்’ எனப் பன்முறையும் பாடியும் அதன் பொருட்டு ஒரு சங்கம் நிறுவியும் பல வகையாகத் தமது கொள்கையை யாண்டும் பரப்பினர்.

தாண்டகச் சதுரராம் திருநாவுக்கரசு சுவாமிகள், ‘விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே, எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்ற தாமே’ என்றருளிச் செய்ததனால் சமயங்கள் எல்லாம் குறுகிய அறிவுடன் ஓரோவொரு தன்மை பற்றி ஒவ்வோர் காலத்தே எழுந்தன என்பதும் ஒருசிலர் மன எரிவினாற் சமயத்தைப் படைத்துக் கூறினும் அங்கும் எங்கும் உள்ள பரம்பொருளை இன்றிப் பொருள் இன்மை

யின் அதுவும் அவனுக்கு இசைந்ததே என்பதும் பெறப்படும். இங்ஙனமே,

‘யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்
மற்றத் தெய்வங்கள்
வேதனைப்படும் இறக்கும் பிறக்கும்
மேல்வினையுஞ் செய்யும்
ஆதலான் இவைஇலாதான் அறிந்தருள்
செய்வன் அன்றே.’

எனவரும் திருப்பாடலால் மற்றச் சமயத்தார் கூறும் கடவுளர் இறப்பு பிறப்பு வட்டங்களிலே சுழன்று இன்னலுழக்குமென அவர் தாமே உரைத்தலின், அவை ஒன்றும் தனக்கில்லாத முழு முதல் இறைவனே வழிபடுவோருக்குத் தக்க பயன் அளிப்பனென்பது அறியப்படும் என்க.

இப்பொதுத் தன்மையினைச் சைவ சமயத்தினர் வெறும் உரையால் மட்டும் விளக்கியவ ரல்லர்; செய்கையிலும் அழியாத வகையில் வெளிப்படையாகச் செய்து காட்டியுள்ளார். சிவாலயம் ஒன்றிலே சென்று ஆய்ந்தோய்ந்து பார்த்தால் இவ்வுண்மை எல்லாம் செவ்வனம் அறியப்படும். சிவாலயத்திலே அயன், திருமால், சூரியன், சந்திரன், இந்திரன், வருணன் முதலான எல்லாத் தேவர்களுடைய உருவங்களும் நிலைநிறுத்திப் பூசனை செய்யப்பட்டு வருதல் கண்கூடாம். சிவபூசை செய்வோரும் விஷ்ணு பூஜை செய்வர். இச்சீரிய உண்மை முற்றும் வெளிப்படையாக விளங்கித் தோன்றும் திருத்தளி, சிதம்பரமாதலின் அன்றே அது தலங்களில் முதலாகத் திகழ்வதாயிற்று. இங்கே ஒரு சமயம் இல்லை; எல்லாச் சமயத்தாராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஞான சபையே காணப்படுகிறது. இதனை மறுப்பார் தமது சமயங்களையே மறுத்தவராவார். இதனைக் கண்ட துணையானே உண்மைச் சமய வாதிகள் யாவராயினும் தமது மார்க்கம் அங்கே வெளியாக இருத்தலைக் கண்டு வணங்குவர் என்றும் அப்பெருமையை நினைந்த மாத்திரத்தே தமது கன்மனமுங் கரைந்து விட்டதெனவும் தாயுமான சுவாமிகள் பின்வரும் அழகிய திருப்பாடலை அருளிச் செய்தனர்:

‘சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளுந் தான்ஒன்றாகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்டதில்லை
பகர்வரிய தில்லைமன் றுட் பார்த்தபோதங்
கென்மார்க்கம் இருக்குதெல்லாம் வெளியே [என்ன
எச்சமயத்தவர்களும்வந்திறைஞ்சா நிற்பர்.
கன்மார்க்க நெஞ்சமுள எனக்குந் தானே
கண்டவுடன் ஆனந்தங் காண்ட லாகும்!’

இதுகாறுங் கூறியவாற்றான் சைவமே சமரச சமயம் என்பது தெள்ளிதிற் புலப்படும் என்க.

---

# திருப்பணி வேலையில் விளையுஞ் சில தீங்குகள்

[ச. சச்சிதானந்தம் பிள்ளை, B.A., L.T.]

24-ஆம் பக்கத் தொடர்ச்சி

இறைவன் எட்டு மூர்த்தங்களிலும் அறிவுடைப் பொருளாகிய ஆன்மாவே சிறந்தது. அதனிடத்துச் சிவனை வணங்கும் ஒப்புயர்வற்ற வழிபாட்டைக் குறிக்க வல்லது சிவலிங்கம். சீவனும் அதனுள் சிவனும் தங்குமிடமாகிய இருதய குகை நெருக்கமாகவும் இருட்டாகவும் தானுள்ளது. இவ்வுண்



மையைக் குறிக்கும் சிவலிங்கமும் அஃதெழுந்தருளி யிருக்கும் மூலத்தானமும், இடநெருக்கம், இருட்டுக் காட்சியருமை என்னும் பண்புகளோடிருத்தல் பொருத்த முடையதே. இதை யொட்டி இன்னுஞ் சில அரிய பொருள்கள் “கோயிலும் குறிகளும்” என்னும் பிறிதொரு கட்டுரையில் விளக்கப்படும்.

சாத்திர காரணங்களை ஒருபுறம் விடுத்து, சாமானிய அறிவுகொண்டு பார்க்கையிலும் கர்ப்பக்கிருக அமைப்பை மாற்றாதிருக்க ஒரு ஏது தோன்றும்: எளிதிற் பெறக்கூடிய எந்தப் பொருளையும் மக்கள் பெரிதாய் மதிப்பதில்லை. வருந்தி அரிதிற் கண்ட பொருளிடத்துத் தான் மதிப்பதிகம். எல்லாம் பட்டப்பகலாய்த் தோன்றும்படி கோயிலிலுள்ள திருவுருவங்களைப் புலப்படச்செய்தால், சாதாரண மக்கட்கு அவற்றிலுள்ள மதிப்புக் குறைந்துபோம். ஓரளவில் காட்சிக்கு அருமை வேண்டும். மூலத்தானத்தில் கடவுளை வழிபட வருவோர் நெடுநேரமங்கிருந்து வீண் வம்பளக்க வசதி யேற்படுத்துதல் கூடாது. பயபத்தி நிலைத்தற்குச் சாதகமாகிய சிறு மறைவு கிடைக்க வேண்டுமாயின், சற்று இருட்டும், நெருக்கமும், காட்சிக் கருமையும் பெருங் கோயிலில் (கர்ப்பக் கிருகத்தில்) பண்டை நாளிற்போல் எந்நாளும் இருத்தலே நன்றாம். அன்றியும் சில ஆலயங்களின் கருப்பக் கிருக முதலியவற்றின் அமைப்புகள் சில தனிப்பட்ட ஏதுக்களால் பொது அமைப்பிற் சிறிது வேறுபட்டுமிருக்கும். அச்சிறப் பியல்புகளையும் அழித்து, “எல்லப்ப செட்டி லெக்க ஏக லெக்க” என்றபடி ஒரே விதமான கட்டிடமாக்கி மட்டந் தட்டிவிடுதல் விரும்பத் தக்க தன்று. மற்றைய மண்டபங்களும் பிராகாரங்களும் விசாலமாயும் மக்கள் உலாவுதற்கு வசதியுடையனவாயும் அமைந்திருப்பது கண்கூடு. இது முறையே.

இரண்டாவதாக இனிக் காட்டப்படும் தீங்கு, சரித்திர ஆதார அழிப்பாம். பழைய கோயில்கள் பலவற்றிலும் கல் வெட்டுக்கள் உள்ளன. அவை, அவ்வக் கோயில்களின் சொத்துக்களையும் நிபந்தங்களையும் புலப்படுத்துவதோடு, பல அரசர்களின் பெயர், குணம், பெருஞ்செயல், நாட்டு நிலைமை, மொழி நிலைமை முதலிய பல அரிய உண்மைகளை நாமறிதற்குக் கருவிகளாகவு முள்ளன. அன்றியும் தமிழ் எழுத்துக்கள் நாளடைவில் அடைந்த மாறுதல்களைக் காட்டவும் இவை உதவுகின்றன. தமிழ் நாட்டுச் சரித்திரம் இன்னும் ஒழுங்காய் முழுவதும் வரையப்படவில்லை. யாது காரணத்தாலோ நம்முன்னோர்கள் எழுதாதுவிட்ட நாட்டு வரலாற்றை இனியேனும் நாமெழுதி நன்கு பரப்பும் வரையில் குருட்டு நம்பிக்கையும் பொய்க் கதைகளும் தம் ஆட்சி செலுத்தி நாட்டு நலத்தைக் குறைத்தேவரும். உண்மைச் சரித்திரம் வரைதற்குக் கல்வெட்டுக்களும் ஒரு பெருந்துணையா யுள்ளன. நவீன திருப்பணிக்காரர் சிலர் இவற்றின் மதிப்பை அறியாது அழித்து வருகின்றனர்.

சிலர் கல்வெட்டமைந்த சுவர்களைத் தகர்த்தெடுத்து உதவாப் பொருளாய் ஒரு மூலையில் எறிந்து விடுகின்றனர். இவரினும் செட்டுடைய வேறு சிலர் பழங் கற்களி லுள்ள எழுத்துகளை உளியாற் செதுக்கி யகற்றிப் புதுக் கற்களாகக் காட்டித் திருப்பணிக்குப் பயன்படுத்தி விடுகின்றனர். எங்ஙனமாயினும் பல நூற்றாண்டுகளாய் நிலவி

யிருந்த கல்வெட்டுக்களுக்கு இவர்கள் கால தூதர்களாகின்றனர். சிவபுண்ணியம் கருதித் திருப்பணி செய்யும் செல்வர்கள் கல்வெட்டழிப்பால் நிகழும் நட்டத்தை உணர்ந்தவர்களல்லரென்றே கொள்ளலாம். இவர்களிடம் செல்வாக்குள்ளவர்கள் உண்மையை எடுத்துக் காட்டி இவர்கள் இவ்வழுவைச் செய்யாமல் காத்தல் கடன்.

வேண்டாத பழங்கற்களை அப்புறப் படுத்தாமல் என் செய்வது என்று ஒருவர் கேட்கலாம். இது நல்ல கேள்வியே. பழைய கோவிலின் சுவர்கள் உளுத்து விட்டதாலோ வேறு பெரிய சீர்கேடடைந்ததாலோ ஆலயத்தைப் பிரித்துப் புதுச்சுவர்கள் கட்டியே ஆக வேண்டுமானால், கட்டலாம். அப்போது கல்வெட்டுள்ள பழஞ் சுவர்களின் கற்களை, வரிசைமுறை தவறாமல் அப்புறப்படுத்தி வேறோரிடத்தில் அம்முறையிலேயே மீண்டுஞ் சுவரெழுப்பி அக்கல்வெட்டுக்களைக் காப்பாற்ற வேண்டும். கற்கள் பெருஞ் சீர்கேடடையாதிருந்தால், அவைகளைக் கொண்டே மீண்டும் பழைய அமைப்பில் சுவர் எழுப்பிவிடலாம். கற்கள் கால நீட்சியால் உளுத்துக் கெட்டுப் போனபோது முன்னாளில் திருப்பணி செய்தோர் கல்வெட்டுக்களைக் காக்கச் செய்த உபாயத்தை அறிந்துகொள்ளல் மிக்க உதவியாயிருக்கும். இதுபற்றிக் கல்வெட்டாராய்ச்சியில்வல்ல காஞ்சி. திருவாளர் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் தமது "தொண்டை மண்டல வரலாற்றுப் பதிப்பின் வெளியீட்டுப் பட்டிகை" யில் எழுதியிருப்பதை அடியிற் காண்க: "முன் காலத்துத் தஞ்சை இராஜராஜேஸ்வரம் எடுப்பித்த ராஜராஜன் மனைவியின் ஆட்சிக் காலத்தில், திருவாவடுதுறைக்கு அணிமையில் உள்ள திருக்கோடி காவலைப் புதுப்பிக்கும் போழ்து, அரசியார் உத்தரவின்படி பழைய கல்வெட்டுக்களை ஓலையிலெழுதிக் கொண்டு புதுக்கட்டடத்தில் முன் உள்ளவாறு பழைய கல்வெட்டுக்கள் எழுதி உள்ளமை அவ்விடத்து இன்றுங் காணலாம். ஐதர் கொள்ளை நடந்த பொழுது காவியூர்க்கோட்டத்துக் கந்தாட்டுப்படவூர் நாட்டு வயலைகாவூர் அறிவாகிய தூய சைவ வமிசத்துக் கவீச்சுர சுந்தர பாரதியார் ஐதர் வரும் வழியில் தம் பொருள்களாகிய பூவராகன்களைச் சுரைக் குடுக்கையில் நிரப்பி மேலே களிமண்ணால் அடைத்து அதன்மேல் கூழை நிரப்பிக் கையிலேந்திக்கொண்டு உடம்பெல்லாம் உருத்திராட்சமணிந்து தலையில் உருத்திராட்சச் சிவலிங்கம் முடியாகத் தரித்துக்கொண்டு உலாவிக் கொண்டிருந்தனர். அப்போது ஊர்ஊராய்க் கொள்ளை அடித்துக்கொண்டு வருகிற ஐதர் இவர் சிவவேடப் பொலிவைக் கண்டு ஆச்சரிய முற்று என்ன வேண்டும் என்ன, தமக்கு ஏதாவது பொருள் கொடுத்தால் நலம் என்ன, அவர்கள் கொஞ்சம் பொருளைக் கொடுக்க, அது பெற்று அப்பொருளால் திருப்பணி செய்த காலையில், முன்னோர்கள் மாதிரி பழைய கல்வெட்டுக்களை எழுதிக் கொண்டு புதுக்கட்டடத்தில் கல்வெட்டுக்களை எழுதி வைத்தமையும் ஆங்குத் தெரியக் கிடக்கின்றது." இவையேயன்றித் தொண்டை நாட்டின் வல்லம் முதலிய பல இடங்களிலும் இம்முறையில் பழங் கல்வெட்டுக்கள் பாதுகாக்கப் பட்டு இன்றளவு முள்ளனவென்றும், இவற்றில் "முன்னுள்ளபடி" என்னும் குறிப்புப் பொறிக்கப்பட்டுள்ள தென்றும் தேசிகரவர்கள் தெரிவிக்கின்றார்கள். இம்முறை இக்காளிலும் கைக்கொள்ளக் கூடியதே. திருப்பணிச் செல்வர்கள் அன்பு கூர்ந்து இதைக் கவனிப்பார்களாக.



திருப்பணி வேலையில் காணும் மூன்றாவது தீங்கு ஆபாச சிற்பமாம். பண்டைக் கோயில்களைப் புதுக்குவோர் அக்கோயில்களில் காணப்படும் அரிய சிற்ப வேலைகளைக் காத்தல் வேண்டும். நல்லன பழுதுபட்டிருப்பின், அவற்றைப் போலவே வேறுஉருவம் அமைக்கும்படி சிற்பிகளை ஊக்க வேண்டும். இஃதொருபுறமிருக்க, தற்காலம் நடக்கும் பல திருப்பணிகளில், கோயில் தூண்களிலும், கோபுரங்களிலும், வாயில்களிலும் பலருக்கும் எளிதிற்புலப்படும் வகையில் மான ஈனம் பாராது அமைத்த அக்கிரம நிர்வாண உருவங்கள் காணப்படுகின்றன. உண்மை நாகரிகம் பெற்ற எந்த மகனும் மகளும் இவற்றைக் கண்டால் வெறுத்து வெள்கித் தலை குனிய வேண்டி யிருக்கிறது. பிறசமயத்தாரும் பிறநாட்டாரும் இவற்றைக் கண்டுழி, உயரிய தத்துவம் பேசும் இந்துக்கள் ஒழுக்கங் குன்றிய போலிகள் என்று மதித்து நம்மையும் நம் சமயத்தையும் வெறுக்கின்றனர். இத்தகைய படிற்றுருவக் கோயில்களுக்குப் போகும் நம்மவர்க்குத்தான் இவ் வுருவங்கள் என்ன நன்மையைச் செய்கின்றன? உலக மாயையிலிருந்து சிறிது நேரமேனும் விடுபட்டுச் சிவத்தியானம் பழகுதற்கும் சிவனடியார் கூட்டுறவு பெறுதற்கு மன்றோ மக்கள் சிவாலயத்திற்குப் போவது? அவர்கள் கண்முன் ஆண் பெண்ணுருவங்களை அலங்கோலஞ்செய்து நாயின் இழி தொழிலை நவநவமாய்க் காட்ட முயலுதல் என்ன பணியோ? என்ன அணியோ? என்ன மதியோ? இந்நாட்டின் விதியோ? அறிந்திலேம்.

கறைக்கண்டன் கோயில்களை இவ்வாறு களங்கமுறப் பண்ணுவதை எந்தத் தேவதையும் விரும்பாது; அறிஞரெல்லாம் வெறுப்பர். இவற்றில் பல இடங்களில் விசாரித்தபோது, 'இவ் விகார வடிவங்கள் திருஷ்டி பரிகாரங்களாய் அமைக்கப்பட்டுள்ளன என்னும் பதில்தான் கிடைத்தது. இக்கருத்து சரியானதுதானோ? அழகிய சிற்பமொன்றைக் கோயிலிற் காணும்போது அழுக்காறு பூண்பவர் யாவர்? இழிமகன் கண்ணேறுபடினும், அது அவன் காணாத சிற்பியை எங்ஙனம் தாக்கும்? அன்றியும் சிற்பத்தைக் கண்டு வியக்கும் நன்மக்கள் வாழ்த்துக்கு வலிமை யுண்டன்றோ? கண்ணேறு படுவதால் தீமையுண்டாகு மென்பார் இவ் வாழ்த்தால் அத்தீமை யொழியும் எனக் கொள்ளலாமே? இதையும் மீறிக் கண்ணேறு தாக்கும் என்னில், அதனின்றும் அவனைக் காக்கவொரு கடவு ளில்லையோ எனக் கேட்டு மறுப்போம்.

சிலர், இது சாத்திர விதியென்று நம்புகின்றனர். இவர்கள் எந்தச் சாத்திரத்தையும் கற்றவராயிருத்தல் சந்தேகமே. அக்கிரம சிற்பம் அமைக்கும்படி எந்தச் சாத்திரமும் சொல்லாது. சொல்லின், அது தள்ளற்பாலதாகிய பொய்ந் நூலே என்று தள்ளுதல் முறைமை. திருவானைக்கா முதலிய சில பெரிய சிவத்தலங்களின் திருப்பணி வேலையைச் செய்த பரம்பரைச் சிற்பத் தலைவர் ஒருவரைச் சென்ற ஆண்டு திரிசிராப்பள்ளியில் இந்தக் கட்டுரை எழுதுவோர் கண்டு இதுகுறித்து விசாரித்தார். "சிற்ப சாத்திரமானது இன்னின்ன இடங்களில் இன்னின்ன தெய்வ உருவங்களை அமைக்க வென்று ஆணை தந்து, வேறு இடங்களில் உசிதமான

உருவங்களைச் சிற்பி ஏற்படுத்தலாம் என்று பொதுவாக உத்தரவு தந்துள்ளது. ஆண்பெண் ணுருவை அலங்கோலப்படுத்திக் காட்டச் சாத்திரத்தில் ஆதாரமில்லை'', என்று அவர் விடை தந்தார். இதைப் படிக்கும் நேயர்களில் சிற்பநூல் கற்றார் அல்லது அத்தகையோரை நன்கறிந்தார் இப்பொருளைப் பற்றிய உண்மைகளை வெளியிடுதல் மிக்க நன்மை தரும்.

வேறு சிலர், 'இவ்விழி வுருவங்கள் பழைய கோவில்களி லெல்லாம் உள்ளன. ஆதலால் இவை ஆன்றோர் ஆசாரத்தில் கிடந்தவை' என்கிறார்கள். இக்கொள்கையும் தவறே. கோவில்களில் இழிந்த பதுமைகளை அமைக்கும் வழக்கம் நம்நாடு சிறுமையுறத் தலைப்பட்ட இடைக்காலத்தில்தான் தோன்றியது. இவ்விழிவு பெரிதும் வளர்ந்தது விஜயநகர ராஜ்ய காலந் தொடங்கியே என்று சரித்திர ஆராய்ச்சி வல்லார் தெரிவிக்கின்றனர். பல்லவர் காலத்துப் பண்டைக் கோயில்களில் இப்புன்மை புலப்படவில்லை. காத லின்பத்தின் கடவுட்டன்மையை உணராது கணக்கிலாக் காமக்கிழத்தியரைக் கைப்பிடித்துச் சிற்றின்பத் துறையின் மூழ்கிச் சிறுமை யெய்திய மன்னர்களும், கடவுளுக்குக் காமக் குரோதாதிகளுண்டெனச் சுட்டும் பொய்க் கதைகளும் இந்நாட்டில் மல்கிய இடைக்காலத்தில் தான் சிற்பத்தில் இழிவு புகுந்தது. ஒரு நாட்டிலுள்ளாரின் மனப்பான்மைக் கேற்றபடியே அவர்கள் சிற்பமும் ஓவியமும் கடவுள் வழிபாட்டு முறையும் அமையும் என்பது பொதுவிதி. பல நூற்றாண்டுகளாய் இவ்விழிவு காணப்படுகிறது. எந்த சாத்திரியாவது, சபையாவது இதைக் கண்டித்து ஒழிக்க முயன்றதாகத் தெரியவில்லை. பாவத்தை வெறுத்துக் கண்டியாதவன் பாவியேயாகிறான். உயர்ந்தோ ரென்றும், கற்றோரென்றும், தலைவர்க ளென்றும் தம்மை மதித்துக் கொண்டிருப்போர் அனைவரும் இதைச் சிறப்பு வகையில் உணர்ந்து ஒழுகற் குரியர். அன்றியும் ஒரு பக்கம் பழைமையானதாயிருப்பின் அது பற்றியே அதைப் போற்ற வேண்டுமோ? "தொன்மை மறவேல்'' என்றதன் பொருள் நன்மையின் பாற்படும் தொன்மையை யெல்லாம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே. "தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா; இன்று தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா'' என்று உமாபதி சிவம் அருளிச் செய்தது நூல்களுக்கு மட்டு மன்று, ஆசாரங்களுக்கும் பொருந்துமோர் விதியே.

மற்று மொன்று இங்குக் கருதற்பாலது. ஆணெலாம் சிவவடிவம் பெண்ணெலாம் சத்திவடிவம். ஆகையால் சத்தியாம் அன்னையின் வடிவத்திலுள்ள பெண்ணை இழிவு படுத்தும் எந்த நாட்டாரும் இனத்தாரும் நெடி தினிது வாழ்ந்த தில்லை. இந்தியாமட்டும் இப்பொது விதிக்கு மீறி நடந்து உய்ய முடியாது. இந்நாடு சீர் பெற வேண்டின், மக்கள் பெண்ணின் பெருமையை உள்ளபடி உணர வேண்டும். இறைவன் படைப்பில் அவள் எவ்வெப் பெருங் கடமைகளைச் செய்துதவ வேண்டுமோ அவை யனைத்தையுஞ் செவ்விதிற் செய்து முடித்தற் கேற்ற உரிமைகளையும் வசதிகளையும் அவட்கு ஆண்கள் மனமுவந்து தருதல் வேண்டும். வாழ்க்கைத் துணை நலமாயும், நன்மக்களைத் தருபவளாயும், கற்பென்னுந் திண்மையால் தன்னையும் தன்னைக் கொண்டானையும் அறநெறியி லுயர்த்தி மேம்பாட்டடைபவரையும் உள்ள பெண்ணை வீணே சிற்பத்திலும் ஓவியத்திலும் இழிவுபடுத்தும் சிறுமையை அறவே நீக்க வேண்டும். இதுவரையில் கூறியதனால் திருப்பணி செய்யுங் காலத்துப் பழைய இழிவுருவங்களை மறைத்தொழித்தலும், அத்தகைய உருவங்களை இனி அமைக்காது விடுத்தலும் கடமை என்று விளங்கும்.



இந்தக் கட்டுரையை முடிக்குமுன் திருப்பணி வேலையில் புதிதாய் நுழையத் தலைப்பட்டிருக்கும் மற்றொரு தீமையைக் குறித்தல் கடனாகின்றது; இது அறிந்தோ அறியாதோ செய்யும் சமயப் புரட்டாகும். நல்ல காலமாய் அது இந்நாளில் பெரு வழக்கில் இல்லை. ஆனால் எவ்விடத்திலும் இப்புரட்டுகள் சிறிதும் நடைபெற இனி இடந்தரலாகாது. கச்சியேகம்பத்திற்குச் சுமார் 9 மைல் தொலைவிலுள்ள வன்பார்த்தான் பனங்காட்டூரில் தேவாரம் பெற்ற திருக்கோயில் ஒன்றுண்டு. அதில் திருப்பணி வேலை நடந்து வருகிறது. வழிபாட்டு நிமித்தம் சில மாதங்கட்கு முன்பு அங்குச் சென்றிருந்த அன்பர் ஒருவர் கண்டு தெரிவித்த விபரீதக் காட்சிகளிற் சில, சைவர் அனைவரும் கவனிக்க வேண்டியவையாகும். விநாயகர் முருகவேள் முதலிய சிவமூர்த்தங்களை எழுந்தருளப் பண்ணி யிருக்கும் சந்நிதிகளின் வாயின் முகப்பில் இலக்குமி உருவங்கள் புதிதாய்ச் செதுக்கப் பட்டுள்ளனவாம். ஆலயத்தில் அமைத்திருக்கும் புதிய தூண்களில் வைணவக் குறியாகிய நாமம் பொளியப்பட்டுள்ளதாம். இப்புதுமைகள் என்ன கருதி நுழைக்கப்பட்டன? திருப்பணிக்குப் பெரும்பொருள் செலவிடும் புண்ணியர் சைவசமயியாகிய ஒரு தனவைசியர். அவர் அறிய இப்புரட்டுகள் நடந்திரா. அவர் நியமித்திருக்கும் காரியஸ்தர் இந்த சேஷ்டைக் காரியம் செய்திருக்கவேண்டும். காஞ்சிபுரத்துக் கருகிலிருத்தலால் சமயப் புரட்டுகள் செய்யத் தூண்டுதல் ஏற்பட்டதுபோலும்! அது சிவாலயத் திருப்பணி செய்யும் செட்டியாருக்கு உடம்பாடா யிருக்கும் என்று எண்ண ஏது வில்லை. சமயப் பாதுகாப்பில் போதிய ஊக்க மற்ற சைவர்கள் அயர்ந்துறங்கும் அற்றம் பார்த்து இப்புரட்டு தொடங்கப்பட்டுள்ளது. இதைக் கவனித்தற் குரிய அன்பர்கள் உடனே தமது கருத்தைச் சிறிது செலுத்தி ஒவ்வாத சிற்பங்களை ஒழித்து விடுவார்கள் என்று நல்லோர் யாவரும் நாடுவர்.

நாடு நலமுற வேண்டுமாயின் வாய்மையை அடிப்படையாக் கொண்ட நல்லொழுக்கமும், உண்மையான சமய உணர்ச்சியும், மன்னுயிர்க் கிரங்கிப் பணிசெய்யும் அருளொழுக்கமும் யாண்டும் புத்துயிர் பெற்றோங்கி எழவேண்டும். திருக்கோயில்களையும் இவ்வெழுச்சிக்கு இன்றியமையாத் துணைகளாக்கிக் கொள்ள வழியுண்டு. செல்வமும் செல்வாக்கு முள்ளோரில் பொதுநல நாட்டமுடையாரும், சமயத் தலைவர்களும், பிற பெரியோரும் இவ்வழிகளை நன்கு புலப்படுத்தி அவ்வழி நடந்து காட்டல் கடமையாம். இத்தகைய கோயில் காரியங்களை நடத்துவோரும் அவற்றில் திருப்பணி செய்வோரும் தம் அன்புத் தொண்டால் நல்லன காத்து அல்லன ஒழித்து ஆண்டவன் அருளுக்குக் கொள்கலன்களாய் விளங்குவார்களாக.

"ஆழ்க தீயதெல்லாம்; அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.''

# நம்பியாரூரர் தேவாரம்

[E. N. தணிகாசல முதலியார், B.A., B.L.]

## 1. காலம்

நம்பி, ஆரூரர், வன்தொண்டர், சுந்தரர் என்னு நாமங்களைப் பெற்றவரும் * சடைய நாயனார், இசைஞானியம்மையார் இவர்கட்குச் செல்வப் புதல்வரும், நரசிங்க முனையரசனால் வளர்க்கப்பட்டவரும், வனப்பகையாருக்கும் சிங்கடியாருக்கும் தந்தையெனப்பட்டம் வகித்துக்கொண்ட வருமாகிய ஆலால சுந்தரர் திருவவதாரம் எக்காலத்தில் நடந்ததென இக்காலத்தில் கூறத்தக்க இந்துதேச சரித்திர நூல்கள் ஒன்றுமில்லை. ஆயினும் அக்காலம் புத்தம் சமணமென்னும் மதங்கள் வேரற்று ஒழிந்த காலமென அத்தேவாரத்தில் உள்ளவிஷயங்களால் அநுமானிக்கலாம். இவரைச் சிறுபோதிலாதரித்த † நரசிங்க முனையரசன் மாவலிபுரத்தைக் கட்டிய நரசிம்ம வர்மனென்றும் அவன் காலம் கி. பி. 635 என்றும் எண்ணப்படுவதால், சுந்தரரும் 7-ம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தவரென்று அநுமானிக்கலாம்.

இவ்வநுமானத்திற்குத் துணையாய்ச் சுந்தரர் தேவாரத்தில் பல அகச்சான்றுகள் கிடைக்கின்றன. திருத்தொண்டத் தொகையில் காணப்பட்ட தென்னிந்தியர் தேச சரித்திர பிரபாவங்களின் * அம்சங்கள் ஆங்காங்கு இத்



தேவாரப் பாசுரங்களிற் காணலாம். கருவூரில் புகழ்ச் சோழன் துஞ்சியது, மாறன்நெல்வேலி வென்றது, ஏயர்கோன் கலிக்காமன் கோயிலுக்கு மானியம் விட்டது முதலியன. சுந்தரமூர்த்தி நாயனார் காலத்திலேயே வேள்விக்குடி முதலிய பல ஸ்தலங்களில் சிவபெருமான் ஆலயங்களுக்குப் பாண்டியர்களும் சோழர்களும் பல வேலி நிலங்களை விட்டாரென்று நமது தேச சரித்திர ஆராய்ச்சியின்கண் உழன்ற பல அறிஞர் கூறுகின்றனர்.

இதன்றியும் சுந்தரமூர்த்தி நாயனார் காலமே சைவ சமயத்தின்கண் நின்ற எல்லா அரசர்களும் ஒற்றுமையுடனும் பக்தியுடனும் வாழ்ந்த காலமாகும். மூவேந்தராகிய சேரசோழ பாண்டியருடன் சுந்தரர் *திருப்பரங்குன்றம் சென்று பாடியதாய்ப் பெரிய புராணம் கூறும். அத்தலத்தில் அவர் பாடிய பதிகத்தின் திருக்கடைக் காப்புச் செய்யுளும் அத்தாட்சியாய்க் காணப்படுகின்றது.

சேரமான் பெருமான் சுந்தரருடன் திருக்கைலாயஞ் சென்றபோது, அவர் தமக்குப் பிள்ளையில்லாததால் தம் தங்கை குமாரனுக்குத் தாம் மீண்டுவரும் வரையில் பட்டம் வகிக்கச் செங்கோலை ஒப்புவித்துச் சென்றதாகவும், அக்காலத்திற்குப் பின் வந்த அரசரும் தங்கை அல்லது தமக்கைப் புதல்வனுக்கு இராச்சியத்தைச் சேரமான் பெருமான் வரும் வரையிலென்று மகுடம் சூட்டுவதும் நாளது வரையில் திருவஞ்சைக் களத்தினின்று திருவாங்கூருக்கு ராஜதானிப் பட்டணம் மாற்றியவர்களும் சேரமான் பெருமானுக்கு மருமக்கள் வழிவந்த திருவனந்தபுர மகாராஜா சமஸ்தானத்தில் இன்றும் நடந்து வருவது யாவரும் அறிந்த விஷயமே. திருவஞ்சைக் களத்தில் அரசாண்ட சேரமான் பல காரணங்களால் ராஜதானிப் பட்டணம் அப்போதைக் கப்போது மாற்றி முடிவில் திருவனந்தபுரத்தை ஸ்தாபித்த வருடக்கணக்கே கொல்லம் ஆண்டுகளென நமது பஞ்சாங்கங்களிலும் காணலாம். ஆகையால் சுந்தரமூர்த்தி நாயனார் காலம் கொல்ல சகாப்தத்திற்குச் சில நூற்றாண்டுகள் முற்பட்டதென்றும், பிறகு சேரவம்சம் வைணவ மதத்தை அநுசரித்ததென்றும், ஆயினும் நமது நாட்டு வைணவர்களைப்போல் சிவ சின்னங்களைக் கைவிடாமல் அநந்த பத்மநாபரைக் குலதெய்வமாய்ப் பூசிக்கும் இவ்வரையனும் திருநீறணியும் வேந்தனென்றும் நாம் காண்கிறோம்.

இதன்றியும் சம்பந்தர் கைலாயத்தைத் திருக்காளத்தியினின்றே தரிசித்துப் பாடினாரென்றும் தமிழ்நாட்டெல்லை கடக்கவில்லை யென்றும் பெரிய புராணம் கூறும். அப்பர் வடதேசம் சென்றும் கைலாயவரை போகாமையும், அக்காலத்து வடதேச சரித்திரத்தை ஆராயின் * முகரிகளென்னும் கொடுங்

---

* தண்புனலும் வெண்மதியும்
 தாங்கியசெஞ் செஞ்சடையன்
தாமரையோன் தலைகலனாக்
 காமர்முனம் பாடி
உண்பலிகொண் டுழல்பரம
 னுறையுமூர் நிறைநீர்
ஒழுகுபுனல் அரிசிலின்தென்
 கலையநல்லூ ரதனை
நண்புடைய நன்சடையன்
 இசைஞானி சிறுவன்
நாவலர்கோன் ஆரூரன்
 நாவினயந் துரைசெய்
பண்பயிலும் பத்துமிவை
 பத்திசெய்து பாட
வல்லவர்கள் அல்லலொடு
 பாவமிலர் தாமே.

† நாதனுக் கூர்நமக் கூர்
 நரசிங்க முனையரையன்
ஆதரித் தீசனுக் காட்செயு
 மூரணி நாவலூரென்
றோத நற்றக்க வன்றொண்ட
 னாரூரனுரைத்த தமிழ்
காதலித் துங் கற்றும் கேட்பவர்
 தம்வினை கட் டறுமே.

* (அடியிற் காணும் விஷயங்களைச் சிலா சாசனங்களைக் கொண்டு ஆராய்க. வேள்விக்குடி சாசனம் நமது ராஜாங்கத்தாரால் வெளியிடப்பட்டதையும் காண்க :)

(i) வையகமுற்று மாமழை மறந்து
 வயலில் நீர்லை மாநிலம் புகுகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
 ஒளிகொள்வெண்முகிலாய்ப்பரந்தெங்கும்
பெய்யுமாமழைப்பெருவெள்ளம்தவிர்த்துப்
 பேர்த்தும்பன்னிருவேலிகொண்டருளும்
செய்கை கண்டுநின் றிருவடி யடைந்தேன
 செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே.
 —திருப்புன்கூர். பண் - தக்கேசி.

(ii) ஏத நன்னில மீரறு வேலி,
 ஏயர்கோ னுற்ற இரும்பிணி தவிர்த்துக்
கோதனங்களின் பால்கறந் தாட்டக்
 கோலவெண்மணற்சிவன் றன்மேல்சென்ற
தாதை தாளற வெறிந்த சண்டிக்குன்
 சடைமி சைமல ரருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன்
 பூம்பொழிற் றிருப்புன் கூரு ளானே.

(iii) மொய்த்த சீர்முந்நூற் றறுபது வேலி
 மூன்று நூறுவே தியரொடு நுனக்கு
ஒத்த பொன்மணிக் கலசங்க ளேந்தி
 ஓங்கு நின்றியூ ரென்றுனக் களிப்பப்
பத்தி செய்தவப் பரசுரா மற்குப்
 பாதங் காட்டிய நீதிகண் டடியேன்
சித்தர் வானவர் தானவர் வணங்கும்
 செல்வத் தென்திரு நின்றியூ ரானே.
 —திருநின்றியூர் - பண் தக்கேசி 3.

* அடிகே ளும்மாள் செயவஞ் சுதுமென்
 றமரர் பெருமானை ஆரூ ரனஞ்சி
முடியா லுலகாண்ட மூவேந்தர் முன்னே
 மொழிந்தா றுமோர்நான்கு மோரொன்
படியாவிவைகேட்கவல்லவடியார் [றினையும்
 பரங்குன்ற மேய பரம னடிக்கே
குடியாகி வானோர்க்கு மோர்கோவு மாகி
 குலவேந்த ராய்விண் முழுதாள் பவரே.
—திருக்கோத்திட்டையும் திருக்கோவலூரும்
 பண் - இந்தளம் 11.

*“ மூள்வாய தொழிற்பஞ் சேந்திரிய வஞ்ச
 முகரிகாண் முழுதுமிவ் வுலகை யோடி
நாள்வாயு நம்முடைய மம்ம ராணை
 நடாத்துகின்றீர்க் கமையாதேயானேல்
 [வானோர்
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
 நெடுந்தூணைப் பாதாளக் கருவை யாரூர்
ஆள்வானைக் கடுகச்சென் றடைவேன்
 [நும்மால்
ஆட்டொணே னோட்டந்தீங் கலையேன்
 [மின்னே ”—அப்பர்.

# " ஏரி நிறைந்தனைய செல்வன் "

[வல்லை - பாலசுப்பிரமணியன், பீ. ஏ.]

---

### மார்கழித் திங்கள்

சின்னாட்களுக்கு முன்பு தான், கருணைக் கடலாகிய இறைவன், உயிர்கண் மாட்டுவைத்த இரக்கத்தினால், அக்கடலிலுள்ள நீரினை யெல்லாம் முகந்து, முகந்து பெய்தது போன்று, தென்னாடெங்கணும் மழை நன்றாய்ப் பொழிந்தது. வானோக்கி வாடியிருந்த பயிர்கள், புதுக்கிளர்ச்சி பெற்று பச்சைப் பசேலென்று, மெல்லிய பூங்காற்றினால் அசைக்கப்பட்டு, தமக்கு உயிர் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்துதல் போன்று, அலை அலைகளாய்ச் சாய்ந்தாடுகின்றன. பயிரிடும் வேளாளர்கள் தமது முயற்சி திருவினையானது கண்டு மகிழ்வெய்துகிறார்கள். இளஞ்சிறார்கள், தமக்குத் தம் பெற்றோர்கள் வழங்க விருக்கும் புதிய ஆடை அணிகலன்களையும் பரிசில்களையும் அடையக் கருதிப் பொங்கல், போகி பண்டிகைகள் எப்போது வரும் என்று அவாவி நிற்கின்றனர். புதிதாக மணவாழ்க்கைக் குட்பட்ட மணப்பெண்கள், தமது காதலரைத் தமது தாயகத்திற்குக் கொண்டுபோய் அறுசுவையுடன் விருந்தூட்டுவோமா; பரிசில் வாங்கித் தருவோமா என்று ஏங்கி நிற்கின்றனர். மரங்களெல்லாம் தளிர்த்திருக்கின்றன; கிளி, குயில் முதலிய பறவைகள் தமது சிறிய இறகுகளை விரித்து, இங்குமங்கும் பறந்து, மரங்களில் தாவி, தமது இசைகளினால் நமக்கு இன்ப மூட்டுகின்றன. உலகம், நெடிது நின்று வருத்திய பெரிய சாக்காட்டினின்றும், நெருநல் விழித்தது போன்று, எங்கணும் புத்துயிர் நிலவுகின்றது. இவ்வாண்டின் படைப்புக் காலம் இதுவேயோ! எங்கணும் பசுமை; எங்கணும் தண்மை; யாண்டும் அழகு; யாண்டும் தெய்விகம்; யாண்டும் இளமை; யாண்டும் மணம்; எங்கும் உயிர்ப்பு; எங்கும் இயக்கம்; எங்கும் மகிழ்ச்சி.

இத்தகைய மார்கழித் திங்களிலே, மதிநிறைந்த ஒரு நன்னாளிலே, புதிதாக வானம் வழங்கித் தண்ணீர் நிறையப் பெற்றிருந்த சென்னைக் கடுத்த புழல் ஏரியின் அழகை யாம் காணச் சென்றிருந்தேம். சென்னை வாசிகளாகிய எமக்கு, இதைத் தவிர்த்துக் காவிரிப் பெருக்கினையும், கொள்ளிடத்தில் புதுவெள்ளத்தினையும் கண்டு களிகூர்வதற்கு அமயம் ஏது? நிற்க, அற்றை ஞான்று புழல் ஏரி உண்மையாகவே எமக்கு அழகிய தொருகாட்சியினை வழங்கிற்று. மிகப் பரந்த நீர்ப்பரப்பு; சில்லென்ற காற்று; ஓங்கார ஒலி; மலையுயரம் எழும்பி யடங்கும் அலைகள் முழுவட்டத்தோடு வான மண்டிலத்து ஊர்ந்துவந்த திங்களின் வெள்ளிய கதிர்கள், அசைகின்ற அலைகளினிடையே படுவதால், தூய வெள்ளியினால் சமைக்கப்பட்ட எண்ணிறந்த நீர்ப்பாம்புகள் நீரின் மேற்பரப்பில் அங்கு மிங்கும் வளைந்து வளைந்து ஓடிக் கண்ணைப் பறிப்பன போற் காணப்பட்டன. இத்தகைய "கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பிடையே" மெய்ம்மறந்து யாம் செம்மாந்திருந்த போழ்தில், எம்மை யறியாமலே எமது நா, தவராஜ சிங்கமாகிய திருநாவுக்கரசு நாயனார் திருமறைக் காட்டில் திருவாய் மலர்ந்தருளிய,



" மூரிமுழங்கொலி நீரானான் கண்டாய்
முழுத்தழல்போல் மேனிமுதல்வன் கண்
**ஏரி நிறைந்தனைய செல்வன்** கண்டாய்[டாய்
இன்னடியார்க் கின்பம் விளைப்பான் கண்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் [டாய்
அண்ணாமலை யுறையெம் அண்ணல் கண்
வாரிமதகளிறே போல்வான் கண்டாய்[டாய்
மறைக் காட்டுறையும் மணாளன் றானே "

என்னும் அருமைத் திருத்தாண்டகத்தை உரக்கப் பாடிற்று. மேற்போந்த திருத்தாண்டகத்தின் இரண்டாம் அடியில் முற்பகுதியதாகிய "**ஏரி நினைந்தனைய செல்வன்**" என்னும் அழகிய தொடர் மொழிகளின் உண்மைப் பொருள் இஃதென ஏரிகரையில் நின்றிருந்த எம் புல்லறிவிற்கு, அஃதறியுமாற்றால் சிறிதே விளங்கிற்று. "யாம் பெற்ற இன்பம், பெறுக இவ்வையகம்."

உலகத்தில் சிலரை நாம் வீணான தற்புகழ்ச்சிக்காரர்கள் (self boasters and self advertisers) எனக் கருதுகின்றோம். அதிலும், வியாபாரத் துறையில் இத்தகைய தற் புகழ்ச்சிக்கு அளவே யில்லை. இவைகட்கு, நாடோறும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வரும் வியாபார விளம்பரங்களே பெரிய எடுத்துக் காட்டுகளாம். ஆனால், இறைவனுடைய தற் புகழ்ச்சியை நோக்க, சின்னாட் பல்பிணிச் சிற்றறிவுடைய மக்களது தற்புகழ்ச்சிகள், ஞாயிற்றின்முன், மின்மினிகள் போன்று ஒடுங்கிவிடுகின்றன. இந்தப் பெரிய, தற்புகழ்ச்சிக்காரன் பெரிய வானுற வளர்ந்த கரிய மலைகளினிடத்தே தன்னை விளம்பரப்படுத்திக் கொள்கிறான்; அலைகள் மோதும் பரந்த கடலினிடத்தே தன் னுண்மையை நிலைநாட்டுகிறான்; கருங்கற் பாறைகள் ஆற்றொணா வெப்பத்தினால் உருகி வழிந்து நெருப்பு ஆறுகளை யுண்டாக்கி, சிந்தையும் மனமும் செல்லா அத்துணைத் தொலைவில் எரிகின்ற சாம்பல்களையும், நெருப்புக் கட்டிகளையும், இடிமுழக்கத்தோடு வாரி வாரி யுமிழும் எரிமலைகளினிடையே தனது வரம்பிலா ஆற்றலைக் காட்டுகின்றான். உதிக்கின்ற ஞாயிற்றிலும், படுகின்ற ஞாயிற்றிலும் தன்னைத் தெரிவிக்கிறான்.

இளங்குழவிகளின் புன் முறுவல் தவழ்கின்ற முகங்களிலும், பொய் சேரா நெஞ்சத்தினராகிய சான்றோரது ஆழ்ந்த சொற்களிலும், தெய்விகக் காதலாற் பிணைக்கப்பட்ட இரு காதலரிடை நிகழும் அன்பு நெகிழ்ச்சியிலும், ஆ, இம்மட்டா! காரணமின்றியே பிறர்க்குத் தீங்கு செய்தலையே தமது பொழுது போக்காகக் கொண்டிருக்கின்ற பெரிய சூழ்ச்சிக்காரர்களிடத்தேயும் தன்னை அறிவுறுத்துகின்றான். வியாபாரிகள் மற்றவர்களைத் தம்மிடம் ஈர்ப்பதற்கு மணியோசை, சங்கீத ஓசை முதலியன முழங்குவது போன்று, இந்தப் பெரிய தற்புகழ்ச்சிக்காரனும் அழகிய பறவைகளை விட்டு, தன்னைப் பற்றிப் பாடச் செய்து நம்மை வஞ்சிக்கின்றான். ஆ! கட்புலனுக்கெட்டா அணுவினும் நுண்ணிய கிருமிமுதல், யானை ஈறாக உள்ள உயிர்களெல்லாம் அவனையே கூவிக் காட்டுகின்றன. இவையிற்றினை யெல்லாம் கூர்ந்து நினைக்கும்போது, தன்னைக் காட்டுதற்கே, இவ்வுலகத்தினைப் படைத்தனன் கொல் என்று கூற எம் மனம் ஒருப்படுகின்றது. தன் பெருமை தானறியாவிடினும், பிறர்க்கறிவுறுத்துவதில் பெருஞ் சமர்த்தன், ஆ, பெரிய வஞ்சகன்! "வஞ்சித்தென்வளை கவர்ந்தான்" என்று நமது அப்பர் நன்று கூறினார். இத்தகைய புகழ் மொழிகளுக்கு மயங்கி இவ்வொருவனறு வலை

கோன் மன்னர் வசப்பட்ட வடநாடுகள் இப்பெரியோர்கள் மிதிக்கப் புண்ணியம் பெற்றன வல்லவென்று அநுமானிக்கலாம். இத்தகைய பூமியின்மேல் பின்னர்ச் சுந்தரரும் சேரமானும் ஆகாய மார்க்கத்தில் சென்றாரெனினும், மலையாள தேசத்தினரான சங்கராசாரியார் வடநாட்டிற்குச் சென்று சைவ சமயாசாரியர் தென்னாட்டில் புத்தம், சமணமென்னும் மதங்களை வேரறக் களைந்ததுபோல் அங்கு வேத நெறியை நிலைநிறுத்தினரென்றும், சைவ சமயாசாரியர்களைச் சங்கராசாரியர் துதித்தனரென்றும் நாமறிவதால், சுந்தரமூர்த்தி நாயனார் காலம் ஸ்ரீ ஆதிசங்கராசாரியருக்கு முற்பட்டதென்றும் நாம் எண்ணவேண்டியிருக்கின்றது.

இதன்றியும் சமணப்பள்ளியாயிருந்த வட திருமுல்லைவாயிலில் மாசிலாமணி ஈசுவரர் கோயில் அப்பர், சம்பந்தர் தொண்டை நாட்டுக்கு வந்தபோது காணப் படாமையாலும் அவர்கள் க்ஷேத்திரக் கோவைகளில் குறிக்கப் படாமையாலும், முல்லைக் காட்டில் தொண்டைமான்* தற்செயலாய்ச் சிவலிங்க தரிசனம்பெற பாலி நதி† வடகரையில் சிவாலயமொன்று கட்டப்பட்டதாயும் சுந்தரர் தேவாரத்தில் காண்கின்றோம்.

இவையன்றியும் இக்காலத்தில் ஆரியப்பிராமணர் யாகங்கள் செய்துழி நேரும் மிருகவதை நன்றன்று என்பதே நமது சைவ நாட்டில் எண்ணப்பட்டது. இதிலுள்ள அபிப்பிராய பேதத்தைச் சம்பந்தர்* ஒருவாறு வெளியிட்டார். சுந்தரமூர்த்தி நாயனார் காலத்திலே† ஜீவஹிம்சை செய்யலாகாதென்றும் எக்காரணத்தால் அது செய்யினும் குற்றமென்றும், அதன் பயன் ‡ இம்மையிலேயே அநுபவிக்க வேண்டுமென்றும் கருணாநிதியாகிய நம்பியாரூரர் ஆண்டார்க்குக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இவற்றையெல்லாம் கவனிக்குமிடத்தும், சுந்தரமூர்த்தி நாயனார் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முதற்பாகமென்று துணியலாகும்.

---

*சொல்லரும் புகழான் தொண்டைமான்
  சூழ்கொடிமுல்லையாற்கட்டிட்[களிற்றைச்
டெல்லையி லின்ப மவன்பெற வெளிப்பட்
  டருளிய விறைவனே யென்றும்
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயி
  லுதனே நரைவிடை யேறீ
பல்கலைப் பொருளே படுதுயர் களையாய்
  பாசுபதா பரஞ்சுடரே.
—திருமுல்லைவாயிற்றிருப்பதிகம் 10.

†இந்நதி யிப்போது மறைந்தது. அதன் அடி திருமுல்லைவாயில் தென்புறத்தில் செம்மண் காடாய்ச் சிறு செடிகள் நிறைந்து விளங்குகின்றது.

* ஊனொ டுண்டல் நன்றெனா
  ஊனொ டுண்டல் தீதெனா
ஆன தொண்டர் அன்பினால்
  பேச நின்ற தன்மையான்
வானொ டொன்று சூடினான்
  வாய்மை யாக மன்னிநின்
றூனொ டைந்து மாடினான்
  ஆனைக்காவு சேர்மினே.
—சம்பந்தர். பண் - கௌசிகம் - 9.

† கல்லலினைப் பொழிய
  நான்களி லாநுயிரைக்
கொல்லலி னைப் பதுவுங்
  குற்றமு மற்றொழியச்
செல்வவயற் கழனித்
  தென்றிரு வாரூர்புக்
கெல்லை மிதித்தடியே
  னென்றுகொ லெய்துவதே?
—திருவாரூர் - பண் - புறநீர்மை.

‡ குற்றொருவரைக் கூறைகொண்டு
  கொலைகள் சூழ்ந்த களவெலாம்
செற்றொருவரைச் செய்த தீமைக
  ளிம்மை யேவரும் திண்ணமே
மற்றொருவரைப் பற்றிலேன்
  மறவா தெழு மடநெஞ்சமே
புற்றர வுடை பெற்றமேறி
  புறம்பயந் தொழப் போதுமே.
—திருப்புறம்பயம் - பண் - கொல்லி.

திருப்பாதிரிப்புலியூர்
## ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளுக்குத்

தாம் புதுச்சேரியில் 1928ஞ டிசம்பர்ம 30உ
சைவ சித்தாந்த மஹாசமாஜத் தலைவராக எழுந்தருளிய ஞான்று சமர்ப்பிக்கப்பட்ட
**பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா**

திருவாரும் மணிமன்றிற் றிகழ்நடம் புரிபரமன்
அருளாரும் குறுமுனிவர்க் கறைந்தபசுந் தீந்தமிழின்
பொருளார்ந்த நுணுக்கமெலாம் பொருந்தவறிந் தினிதுரைத்தெம்
இருளார்ந்த மதிவிளக்க வெழுந்தகுரு மணிகேட்க!

வாக்கிறையைக் கரையேற்றும் வண்பதியி லமர்ந்ததுவும்
நீக்கிளமைப் பவக்கடலின் கரையேற்ற நினைத்தன்றே.

கற்றவர்சூ ழவைக்கிறைமை காதலித்துத் தமிழ்வளர்த்தல்
நற்சிவசண் முகநாம நண்ணியநும் பழந்தொழிலே.

ஆரசைவருள் ளாரனின்றாட் டானேலெனு மெய்மை
வீரசைவத் திருமரபின் விழுமியீர்க் குரித்தன்றே.

அதான்று

ஐயமேற் றிடுந்துறவி யாயுமெம தகத்தில்வரும்
ஐயமறுத் தரும்பொருட்கள் பலநல்க லறமாமோ.

குறளைமொழி வதுவாக்கின் குற்றமென வெமக்குரைத்துங்
குறளையடிக் கடிஎம்பாற் கூறுவதும் பெருவியப்பே.

அகவியலும் புறவியலும் வெவ்வேறென் றறைதமிழ்தேர்ந்
தகம்புறமு மொன்றாக ஒழுகுகின்றீ ரற்புதமே.

பற்றறுத்தார் வீடுறுவ ரெனப்பகர்வீர் நும்பதத்தே
பற்றுறுத்தி எமைப்பிணிக்க வழிதேடப் பார்ப்பதோ.

அனைத்தினுக்கும் கருணைசுரந் தளிக்கும்நெறி மேற்கொண்டெம்
வினைக்குமுதற் பெரும்பகையாய்க் கேடுசெய விழைவதோ.

மெய்ஞ்ஞானத் தண்புகலி வேந்தரைப்போற் சிவிகையிவர்ந்
தஞ்ஞான முடையேமுள் ளகத்துலவ லழகாமோ.

அன்பினு மருளென்னுங் குழவிகெதிராய் நுமதருளே
அன்பினு மெமக்கென்ன நூன்மாற்ற லமைவதோ.

தனியிருந்து பேசாத தவநெறிநீத் தெமக்கிரங்கி
நனியெளியீரா யாய்த்தொடர்ந்தி யாங்கூற மொழிநண்ணுவதோ.

அவியுணவேட் டொருபால் வானகப்புலவர் விழித்திருப்பச்
செவியுணவு தமிழ்ப்புலவர்க் கிடுந்தொழின் மேற்செல்வதோ.

வடமொழியும் நேருறுதென் வான்மொழியு மாங்கிலமும்
அடிதாழ்வோர்க் குரைத்துமற்றோர் தலைதாழ்த்த லமைவதோ.

உரைக்கடங்கற் கரிதாம்நும் உயரிசையைத் தாழிசையால்
உரைக்குமெம்மோ டினிதளவி ஒருங்கிசைந்து கேட்பதோ.

எனவாங்கு

நினைப்பல புகழ நினைப்பினு மெனினும்
விரிப்பி னகன்றும் தொகுப்பி னெஞ்சியும்
வழுத்த வாரா வாறறிந்
திழுக்ககற் றுகவென இணையடி பணிதுமே.

**வித்துவான் - அ. வரத நஞ்சைய பிள்ளை அவர்கள்,**
தோரமங்கலம், (ஜலகண்டபுரம் தபால்.)

187117

இரண்டாம் நாள் காலை எ௰ மணிக்கு முன் போல் கூட்டம் துவங்கத் திருவாளர் கா. வேதாசல முதலியாரவர்கள் **ஜீவகாருண்யம், ஒரு பகுதி** என்பதைப்பற்றிச் சமத்காரமும் அனுபவமும் துலங்கவும் திருவாளர் - E. N. தணிகாசல முதலியார் B.A., B.L. அவர்கள் **நம்பியாரூரர் நற்றமிழ்** என்பதைப் பற்றித் தமது ஆராய்ச்சித்திறன் விளங்கவும், திருவாளர் - பு. சமரபுரி முதலியாரவர்கள் **கலைமலிந்த சீர்நம்பி** என்பதைப் பற்றிச் சைவ சமய நலங்கள் பரிமளிக்கவும் மிக அழகாக உபந்நியசித்தனர்.

அன்று மாலை உ௰ மணிக்கு மறுபடி கூட்டங் கூடத் தமிழ்ப் புலவர் திருவாளர் கு. குமாரசாமிப் பிள்ளையவர்கள் **கொங்கு நாட்டு வைப்புத் தலங்கள்** என்பதைப் பற்றி ஆராய்ச்சித் திறனுடனும் தமிழ்ப் பண்டிதர் திருவாளர் C. S. இராஜாப் பிள்ளையவர்கள் **திருத்தொண்டர் புராண மாட்சி** என்பதைப் பற்றி ஐயந்திரிபற்ற ஆராய்ச்சியோடும், திருவாளர் - சர்க்கரை இராமசாமிப் புலவர் அவர்கள் **மயூரகிரிக் கோவை நயம்** என்பதைப் பற்றித் தமிழ்ச் சுவை தேக்கவும் மிக விரிவாகப் பிரசங்கம் புரிந்தனர். தலைவர் முடிவுரையும் தேவார இசையும் அனைவரையும் மகிழ்விக்க அன்றைக் கூட்டம் முடிவுற்றது.

மூன்றாம்நாள் காலை எ௰ மணிக்குத் தேவார பாராயணத்திற்குப் பின் காரிய விஷயாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. புதிதாக அமைக்கப்பட்ட விதிகள் வாசித்து ஒரு மனமாய் ஏற்றுக்கொள்ளப் பெற்றன. பின்னர் அவ்விதிகளின்படி வினையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன் பின்னர்க் கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேறின.

(1) சிவாலயங்களில் பூசையில் ஓர் அங்கமாகிய தமிழ் மறையோதி முடிந்த பிறகே விபூதிப் பிரசாதம் மகா மண்டபத்தில் வழங்கப் பெறுதலே சைவமரபாக இருப்பதால், அதனை ஆலய தர்மகர்த்தர்களும், அதிகாரிகளும் வழுவாமல் நடத்தி வைத்து வர வேண்டுமென்று இச்சமாஜத்தார்கள் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

(2) தேவதாசிகள் என்று வழங்குபவர்களைக்கொண்டு ஆலயங்களில் எத்தகைய கைங்கரியங்களையும் செய்விக்கும் வழக்கத்தை முற்றிலும் நிறுத்த வேண்டுமென்று ஆலயதர்மகர்த்தர்களை இச்சமாஜத்தார் கேட்டுக்கொள்வதுடன், ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டியம்மை அவர்கள் சென்னை, சட்டசபையில் இது சம்பந்தமாகக் கொண்டு வந்துள்ள மசோதாவையும் ஆதரிக்கின்றனர். [ஸ்ரீமதி முத்துலக்ஷ்மியம்மை மசோதாவில், "கன்னிகா விரதத்தை யனுஷ்டிக்காத" என்பது நீக்கப்பட வேண்டுமென்றும், 'சிவாலயங்களுக்கு' என்பது 'தேவாலயங்களில்' என மாற்றப்படல் வேண்டுமென்றும் திருத்தப் பிரேரேபணைகள் சபையில் கொண்டு வரப்பட்டுச் சபையாரால் ஒருமிக்க ஒப்புக்கொள்ளப்பட்டதின்மேல், இத் திருத்தப்பாடுகளுடன் மேற்படி மசோதா ஆதரிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.]

(3) சைவத் திருமுறைகளைச் செவ்வனே அச்சிட்டுத் திருமுறை ஒன்று இரண்டணவுக்கு மேற்படாத விலைக்கு வெளியிடவும், இன்னுமுள்ள சைவ நூற்களைச் சிறு விலைக்கு வெளியிடவும், இந்நூற்கள் ஒவ்வொரு சைவர் கையிலும் இருக்கச் செய்யவும் இச்சமாஜத்தார் எடுத்துக் கொள்ளும்படி செய்யும் முயற்சி கை கூடுதற்கும், இச் சமாஜம் என்றும் நிலைநிற்கவும் ஆதரவாகச் **சைவ சித்தாந்த மகாஜன ஐக்கிய நாணயச் சங்கம்** ஒன்று ஏற்பாடு செய்ய வேண்டும்.

(4) மாணவர்கள் சமய வுணர்ச்சியுடன் தமிழ் பயிலுதற்கு வேண்டும் பாட புத்தகங்களைத் தக்கவரைக் கொண்டு எழுதி வெளியிடவும், சைவ சமயப் போதகர்களைப் பயிற்றும் கல்லூரி யொன்று நிறுவவும் வேண்டுமெனவும், இத்தொண்டுகள் நிலையாக நடைபெறுவதற்கு வேண்டும் பொருளுதவியைச் சைவ சமய அபிமானிகள் வழங்கவேண்டுமெனவும், புலிசை ஞானியார் மடம் மஹா சந்நிதானத்தின் கண்காணிப்பில் இவை நடைபெற வேண்டுமெனவும் இச்சமாஜத்தார் தீர்மானிக்கிறார்கள்.



சமாஜத்தின் சார்பிலே நடைபெற்ற தமிழ்ப்புலவர் கூட்டம் பின் தொடங்கிற்று. அதில் தமிழ்ப்புலவர் திருவாளர் M. நடேச முதலியார் அவர்கள் **மூடத்தாமாக் கண்ணியார்** என்பதைப்பற்றிச் செந்தமிழ்ச் சுவையையும் பண்டைப் புலவர் நல்லிசைப் புலமையையும் விளக்கிக் காட்டியும் திருவாளர்- சர்க்கரை இராமசாமிப் புலவரவர்கள் **தமிழ்த் தொண்டு** என்பதைப் பற்றிப் புலவரை அக் காலத்துச் செல்வர் ஆதரணை செய்தமையினையும் அவர்பால் வைத்திருந்த நன் மதிப்பையும் இனிமையுடன் எடுத்துக் காட்டியும் சிறந்த பொருளுரை செய்ததும் கீழே வரும் தீர்மானங்கள் தலைவர் அவர்களால் எடுத்தோதப்பட்டுத் தமிழ்ப் புலவர் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்களால் அடுத்து விளக்கிக் காட்டப்பட்டபின் புலவர் சங்கத்தால் ஒரே மனமாய் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

(1) செந்தமிழ்ச் சர்வகலா சங்கம் விரைவிலே நிறுவப்படல் வேண்டுமென இச்சமாஜம், தலைமை மந்திரியார் ஸ்ரீமான் சுப்பராயன் அவர்களை வேண்டிக் கொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கின்றது.

(2) தமிழ்மொழியைச் சர்வகலா சங்கத்தார் **உயர் தனிச் செம்மொழிகளில்** (amongst the clasical languages) ஒன்றாக வைக்காது இருத்தல் தவறென்றும் உடனே தமிழ் மொழியை அத்தகை மொழிகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென இச்சமாஜம் சங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

(3) ஐந்து ஆண்டு போதகர்களாக இருந்த தமிழ்ப்புலவர்கள்கூடப் போதனு முறையில் படித்துத் தேறவேண்டுமென்னும் விதியை உறுதிப்படுத்தக் கூடாதென்று இச்சமாஜம் தீர்மானிக்கின்றது.

(4) வடமொழியிற் போலத் தமிழிலும் சிரோமணிப்பட்டப் பரீக்ஷை வைத்து நடத்தி வைக்கவேண்டுமென இச்சமாஜம் சர்வகலா சங்கத் தலைவரைக் கேட்டுக் கொள்ளவேண்டுமெனத் தீர்மானிக்கின்றது.

(5) சர்வகலா சங்கத்தார், **வித்வான், சிரோமணி, வித்வசிரோமணி** முதலான பட்டங்களை இப்போதுள்ள தகுதி யமைந்த சிறந்த தமிழ்ப் புலவர்கட்கு அளிக்கவேண்டுமென இச்சமாஜம் வேண்டுகின்றது.

மாலை ௩ மணிக்குச் சமாஜம் தொடங்கத் தமிழ்வேத பாராயணம் முடிந்ததும், திருவாளர் திவான்பகதூர் P. சுப்பையா முதலியாரவர்கள் பீ. ஏ. பீ. எல். **இளைஞருக்குச் சமய அறக்கல்வி** என்பதைப்பற்றி அருமையான அநுபவ உரையும், புலவர் திருவாளர் C. S. சுவாமிநாத முதலியாரவர்கள், **சைவமும் புலால் மறுத்தலும்** என்பதைப் பற்றி அன்பு மிக்க உருக்க வுரையும், தமிழ்ப் புலவர் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் **முதற்படி** என்பதைப் பற்றி விரிந்த உதாரணங்களும் அநுபவ நிகழ்ச்சிகளும் கூடிய அழகிய உரையும், திருவாளர் ம. பாலசுப்ரமணிய முதலியார் அவர்கள் பீ. ஏ. பீ. எல். **தன்மை முன்னிலை படர்க்கைக் கடவுள்** என்பதைப்பற்றி ஆங்கிலப் புலமை தோன்றப் பார்த அரிய உரையும் கேட்டோர் உள்ளத்திற் பதியும் வண்ணம் நிகழ்த்தினர்.

பிறகு தலைவர் சிந்தைக்கினிய செவிக்கினிய மாமருந்தாம் தமது முடிபுரையை யாவர் உள்ளத்தும் தேக்கப் பொழிந்ததும் தேவாரம் உயிரைக் கவரும்படி ஓதப்பட்டது. அப்பால் மிகத் தேர்ச்சியும் திறமும் விளங்கத் தேவாரமோதிய ஸ்ரீமத் நடராஜ தேசிகர் அவர்கட்கும், கூட்டத்துக்கு இட முதவிய திருவாளர் சீகாழி கிருஷ்ணசாமி செட்டியார் அவர்கட்கும், பொருளுதவி புரிந்து இதனை நடைபெறுத்துவித்த செந் தமிழ்ப்பிரகாச சபையினர்கட்கும் திருவாளர்கள் பூர்ணங்குப்பம் முனிசாமிப்பிள்ளை அவர்கள், சிங்கப்பூர் அண்ணாமலை முதலியார் அவர்கள், டாக்டர் சுந்தரேசன் அவர்கள், கிரந்தே சிவசங்கர செட்டியார் அவர்கள், T. ஷண்முகம்பிள்ளை அவர்கள், S. பழனிசாமி பிள்ளையவர்கள், K. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், ஆகிய இச்சைவாபிமானச் செல்வர்கட்கும் சாரணச் சிறுவர் ஸ்ரீ ராஜேசுவரன் அவர்கட்கும் அவர் படைச் சிறுவர்கட்கும் சபையார் கரகோஷத்துடனும்

யிற் சிக்கிக் கொண்டவர்களே புலவர்களெனப்படுகிறார்கள்; அத்தகைப் புலவர்களுள் நமது திருநாவுக்கரசு நாயனாரும் ஒருவர். ஆனால் நாம் "ஏமாறவில்லை" என்று உடனுக்குடனே சொல்லிக் கொள்கிறோம்.

ஈண்டு இக்கட்டுரைக்கு மகுடமாக யான் புனைந்திட்ட "ஏரி நிறைந்தனைய செல்வன்" என்னும் அப்பரது திருவாக்கு அவர் தம் இயற்கை வருணனைத் திறத்தை நன்கு விளக்கிக் காட்டுகிறது. இச்சிறிய தொடர் மொழிகளில் நமது நாயனார் எத்தனையோ விழுமிய நுண்ணிய கருத்துக்களைப் புதைத்து வைத்திருக்கின்றார். முதற்கண், இயற்கை அன்னை பற்பல விதங்களில் நமக்குத் தனது பேரெழிலைக் காட்டுகின்றாள். அவற்றுளெல்லாம் மிகப் பெருவனப்பினதும், காண்போர் மனங்களுக்கு ஆறுதலையும், அமைதியையும் தரக்கூடியவை நீர் நிலைகளும், நீர்ப் பரப்புகளுமே யாகும். பெரிய எரிமலை யொன்று நெருப்புக் குழம்பை யுமிழ்கின்றபோது, தனது பெருஞ்சீற்றத்தையும், அடிவரை மிகப் பருத்து, வானுற வோங்கி வளர்ந்திருக்கும் இமயமலையினிடத்தே தனது அளக்கலாகாப் பெருமையினையும், இடி, மின்னல், புயற்காற்று, பூகம்பங்களினூடே தனது வரம்பிலா ஆற்றலையுங் காட்டுகின்ற இயற்கைத்தேவி, ஆழ்ந்த கடல், பரந்த ஏரி, வளைந்து வளைந்து ஓடும் ஆறு, மலையுச்சிகளினின்றும் சிறு சிறுவென்று விழும் அருவி, அமைதியுற்ற குளம் என்னும் இவைகளினூடே இயற்கை யன்னைத் தனது தண்மை, பெண்மை, அமைதி, ஆக்கம் முதலிய அணிகலன்களைப் பூண்டு, பேரெழிலோடு விளங்குகின்றாள். ஒரு பரந்த அமைதியுள்ள நீர்ப்பரப்பைக் கைக்காணுழி, ஒன்று மறியாப் பெண்களும், ஆடவருங்கூட "ஆ! தண்ணீர்ப் பரப்பு எத்துணை வனப்பினதாகத் தடாங்கமாய் இருக்கின்றது" என்று வாய்விட்டுக் கூவுகின்றனர். நெடு நேரம் ஏடுங்கையுமாக இருந்து, பல நுண்ணிய கருத்துக்களை ஆராய்ந்த பிறகு, அவைகளினாலுண்டான அயர்ச்சியை நீக்குதற் பொருட்டு, ஒரு நீர் நிலையின் மருங்கமர்ந்து, அதன்மேல் நமது கட்புலனைச் செலவிடுத்தோமானால், நெடுநாட்சிறைப் பட்டிருந்த ஒருவன் விடுதலை பெற்றவாறுபோல, நமது கண்கள் விடுதலையடைகின்றன. அக்கட் புலனின் ஊடே அமைதியும், ஆறுதலும், தண்மையும், நமது உள்ளங்களிற் பாய்ந்து, இழந்த ஆக்கத்தை மீண்டும் பெறச் செய்து நமக்குப் புத்துயி ரளிக்கின்றது. நோக்குகளில் குறைபாடுடைய வொருவனுக்கு, கண் மருத்துவ நிபுணர்கள், "கடற்கரை மருங்கமர்ந்து, அடிவானத்தை உற்று நோக்கிய வண்ணமாயிரு" என்று பரிகாரங் கூறுதலும் ஈண்டு நோக்கற்பாலது.

மற்றும், நீர்நிலைகள் நமக்கு அடக்கத்தையும் அமைதியையும் உண்டு பண்ணுகின்றன. ஒரு பெரிய மலை யடிவாரத்தில் நின்று, தலைநிமிர்ந்து அண்ணாந்து அம்மலை யுச்சியினைப் பார்ப்போமானால், நமது சிறுமை நமக்குப் புலனாகிறது. எல்லாவற்றிலும் சிறந்த ஒருவர், நாம் அவரை ஏறெடுத்துப் பார்ப்பினும், தாம் நம்மைச் சிறிதும் மதியாது இறுமாந்து நிமிர்ந்து நிற்பது போலன்றோ ஒரு மலை நிற்கின்றது.

(தொடரும்)

# சைவசித்தாந்த மஹா சமாஜத்தின் இருபத்திரண்டாவது கூட்டம்

[பத்திராசிரியர்]

பிரபவ ஆண்டு மார்கழித் திங்கள் ௧௫, ௧௬, ௧௭ - ஆம் (1927ஆம் டிசம்பர் 30, 31, 1928 ஆம் ஆம் ஜனவரி 1) நாட்களாகிய வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் புதுவைமா நகரின்கண் திருவாளர் - சீகாழி **கிருஷ்ணசாமி செட்டியார்** அவர்கள் மாளிகையில் சமாஜக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ் நாட்டுப் பெரியோர் பலரும் செந்தமிழ்ப் புலவர் பலரும் சைவ சித்தாந்தச் செல்வர் பலரும் துறவிகள் சிலரும் போந்திருந்தனர். உத்தியோகத் துறையில் சிறந்த பதவியில் உள்ளவர்களும் ஆங்கிலக் கலையிற் றேர்ந்தவர்களும் உள்ளூர்ப் பெருமக்களும் கனதனவான்களும் ஒருங்கு குழுமிய கழகம் செந்தமிழ்ச் சிவஞான சங்கமாகத் துலங்கியது. இவ்வாண்டிலே சமாஜத்தின் சார்பிற் கூட்டப்பட்ட தமிழ்ப் புலவர் கூட்டம் செந்தமிழ்ச் சுவையை மேலும் மேலும் ஊட்டியது. விரிவுரையாளர்கள் செய்த பொருளுரைகள் யாவும் விழுப்பயன் தருவனவாகவும் இன்பம் பயப்பனவாகவும் விளங்கின. தலைவர் சுருக்கிக் கூறிய முடிவுரைகள் தெவிட்டாத இன்பத்தை விளைத்தன.

முதனாள் கூட்டம் காலை ௭ மணிக்குத் தொடங்கத் தமிழ்மறை யோதிக் கடவுள் வணக்கஞ் செய்து முடிந்த பின்னர்த் திருவாளர் ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் எடுத்து மொழியத் திருவாளர் தி. நல்லசிவன் பிள்ளையவர்கள் அடுத்து மொழிய, திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் தொடுத்து மொழிய **ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்** தலைமை வகித்தார்கள். பிறகு பண்டித ரத்நம் புழலை திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் இயற்றிய வரவேற்புக் கவியைத் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் வாசித்தனர். அடுத்துத் தலைவர் அவர்கள் அருமை மிக்க முன்னுரை அமுதம் வழங்கினர். அதன் பிறகு திருவாளர் - ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், B. A., L. T. **சைவத்தின் எதிர்கால நிலை** என்பதைப் பற்றி ஒரு சொற்பொழிவு அழகுமிக நிகழ்த்தினார்கள். பின்னர்த் திருவாளர் மா. ரா. குமாரசாமிப் பிள்ளையவர்கள் **தற்காலமும் நம்வேலையும்** என்பதைப்பற்றி விநோத ரசம் ததும்பவும், வித்துவான் திருவாளர் அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் **சர்வமத சம்மதம்** என்பதைப்பற்றிச் சைவ மலமும் சித்தாந்தமும் மணக்கவும், திருவாளர் தமிழ்ப்புலவர் சிவ முத்துக்குமார சுவாமி முதலியார் அவர்கள் **சமயம்** என்பதைப் பற்றிச் சுவை துளும்பவும் விரிவுரைகள் யாவரும் இனிக்குமாறு செய்தார்கள்.

மாலை 2 மணிக்குக் கூட்டம் தொடங்கு முன்னர்த் தமிழ் மறை யாவர் கருத்தையும் கவரும் வண்ணம் இன்னிசையுடன் இனிது ஓதப்பட்டது. அடுத்துத் தலைவர் அவர்கள் தமது முன்னுரையாகச் **சைவ சித்தாந்த விளக்கம்** என்னும் பொருள்பற்றி மிக நயமாகவும் தெளிவாகவும் பசு மாத்தாணி அறைந்தாற்போல எடுத்தோதினர். அதன் பிறகு தமிழ்ப் புலவர் திருவாளர் கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் **கறைக்கண்டனுக்கு மூத்தவள்** என்பதைப் பற்றித் தமது கல்வியாற்றல் தோன்றவும், திருவாளர் மணி. கோடீசுவர முதலியார் அவர்கள் B.A., L.T. **சைவ ஒழுக்கம்** என்பதைப் பற்றிப் புதுக் கருத்துக்களின் நயத்துடனும், மிக இனிமையான உபந்யாசங்கள் செய்தனர். பின் திருப்புகழ் மணி. திரு. T. M. கிருஷ்ணசுவாமி ஐயர் அவர்களும் ஏனை மயிலைத் திருப்புகழடியார்களும் திருப்புகழ்ப் பாராயணம் மிக உருக்கத்துடனும் அன்பர் பரவச முறவும் நடத்தினார்கள். தலைவர் அழகிய சுருக்க விளக்க முடிபுரை கூற முதனாள் கூட்டம் கலைந்தது.

## வெளியூர் நிருவாக சபை அங்கத்தினர்

### செங்கற்பட்டு

1. திரு. M. சாமிநாத முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.
2. திரு. வா. மாசிலாமணி முதலியார் அவர்கள், வாலாஜாபாத்.
3. திரு. பொன்மார் நடேச முதலியார் அவர்கள், தமிழ்ப்புலவர், செங்கற்பட்டு.

### வட ஆர்க்காடு

4. திரு. இராஜவேலு முதலியார் அவர்கள் பீ. ஏ., வேலூர்.
5. திரு. இராஜா பிள்ளை அவர்கள், தமிழ்ப்புலவர், வேலூர்.
6. திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் பீ. ஏ. எல். டி., வாலாஜாநகரம்.

### சித்தூர்

7. திரு. ஆ. தேவராஜ முதலியார் அவர்கள் பீ. ஏ., பீ. எல்., *Public Prosecutor*.
8. திரு. மணி. கோடீசுவர முதலியார் அவர்கள் பீ. ஏ., எல். டி.
9. திரு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் பீ. ஏ., எல். டி.

### சேலம்

10. திரு. V. V. C. நடேச முதலியார் அவர்கள்.
11. ராவ்பஹதூர் எல்லப்பச் செட்டியார் அவர்கள். M. L. C.
12. திரு. இரத்தினசபாபதிக் கவுண்டர் அவர்கள், மிட்டாதார், புதுப்பாளையம்.

### கோயமுத்தூர்

13. திவான் பஹதூர் சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்.
14. திரு. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள்.
15. ராவ்பஹதூர் C. இரத்தின சபாபதி முதலியார் அவர்கள் M. L. C.

### நீலகிரி

16. திரு. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் பீ. ஏ., பீ. எல்.
17. திரு. இரத்தின முதலியார் அவர்கள் பீ. ஏ. பீ. எல்.

### தென் ஆர்க்காடு

18. திரு. கந்தசாமி முதலியார் அவர்கள், தமிழ்ப்புலவர்.
19. திரு இரத்தினவேற் பிள்ளை அவர்கள்.
20. திரு. ம. ரா. குமாரசுவாமிப் பிள்ளை அவர்கள், மணம்பூண்டி.

### தஞ்சாவூர்

21. திரு. இராஜதுரைச் செட்டியார் அவர்கள், பொறையாறு.
22. திரு. R. கந்தசாமி மூப்பனார் அவர்கள் பீ. ஏ., பீ. எல்.
23. திரு. I. குமாரசாமிப்பிள்ளை அவர்கள்.

### திரிசிரபுரம்ப்பள்ளி

24. திரு. அமிர்தலிங்கம் செட்டியார் அவர்கள்.
25. திரு. நடேச முதலியார் அவர்கள், தமிழாசிரியர்.
26. திரு. T. M. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள், பீ. ஏ. பீ. எல். M. L. C.

சந்தோஷ ஆரவாரத்துடனும் காரியதரிசியாரால் வந்தனம் அளிக்கப்பட்டது.

அடுத்த ஆண்டு சமாஜக் கூட்டம் திருவாளர் P. இரத்தினசபாபதி கவுண்டரவர்கள் அன்புகூர்ந்து கேட்டுக் கொண்டபடி கோயமுத்தூரில் நடைபெறுவதற்குச் சமாஜத்தார் இசைந்த அச்சிவபுண்ணிய சீலரின் அன்பின் திறத்தைப் பாராட்டி அவருக்கு வந்தனம் அளித்தனர்.

இந் நிகழ்ச்சிகளுடன் இருபத்திரண்டாம் ஆட்டைக் கூட்டம் எம் முழுமுதற் செழும் பொருளாகிய சிவபெருமான் திருவருளால் இனிது நடைபெற்றது. திருவாளர் T. V. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் இடையிலே பலர் வேண்டுகோட்கு இணங்கி ஆர்வமும் அன்பும் பொங்கி வழியச் சமயச் சீர்திருத்தம் என்பது பற்றிச் செய்த உபந்நியாசம் கேட்டவர் செவியிலே என்றும் மாறுதிருக்கு மென்பது திண்ணம். சைவ சமயத்தை ஓம்பாது நம்மனோர் உறங்கிக் கிடத்தலும் அதனால் நமக்கு ஏற்படும் இன்னல்களும் பிறித்துவச் சமயத்தார் தம் சமயத்தை வளர்க்கச் செய்துவரும் அற்புத விஷயங்களும் பிள்ளை அவர்களால் எடுத்துக் காட்டப்பட்டன. பிள்ளை அவர்களும் இவ்வாண்டிலே யிருந்து சமாஜத் துணைத் தலைவராகவும் இருக்க ஒப்புக் கொண்டுள்ளார்கள். இவ்வாண்டு நிகழ்ச்சிகள் யாவும் எமக்கு நமது சமாஜம் மீண்டும் புத்துயிர் பெற்றது என்பதையும் பண்டை உயர் நிலையை இனி அடையும் என்பதையும் காட்டுதற்கு நன்னிமித்தங்களாகத் தோன்றுகின்றன. வரும் ஆண்டிலே கோயமுத்தூரின்கண் பிரபல வர்த்தகரும் சைவப் பிரபு சிகாமணியும் யாவர்க்கும் இனியாரும் எளியரும் எடுத்த கருமத்தைத் தொடக்கு முடிக்கும் ஆற்றலும் வாய்ந்த திருவாளர் இரத்தினசபாபதி கவுண்டர் அவர்கள் நன் முயற்சியால் சீரும் சிறப்பும் பெற்று நமது சமாஜம் சைவ சமயத்தின் சமரச வியாபகத் தத்துவ ஒளியை உலகமெங்கும் பரப்புமென எல்லாம் வல்ல எம்பெருமான் திருவருளை முன்னிட்டு நம்புகின்றேம்.

---

## அறிக்கை

காரியதரிசியிடம் சந்தா தொகை செலுத்திய அங்கத்தவர்களுக்கு இம்மாத இதழுடன் ரசீதும் வருகிறது. ஏனையோரும் விரைவில் சந்தாவைச் செலுத்தி ரசீது பெற விரும்புகிறோம்.

## சமாஜத்தின் ஜனவரிமாதக் கூட்ட வரலாறு

நமது சமாஜத்தின் புதிய விதிகளில் ஒவ்வொரு மாதமும் சென்னையிலேனும் வெளியூர்களிலேனும் ஒரு பாகத்தில் சமய உணர்ச்சியை ஊட்டி வளர்த்தற்காகச் சமாஜப் பொதுக் கூட்டம் ஒன்று நடத்த வேண்டுமென்று நிறுவப் பட்டிருக்கிறது. அவ்விதிக்கிணங்க ஜனவரி மாதத்துக் கூட்டம் சென்னை வேளாளத் தேனாம்பேட்டை ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் திரு. அ. சிவசங்கர முதலியாரவர்கள் தலைமையில் 1928ஆம் ஜனவரிமீ 30உ திங்கட்கிழமை 6 மணிக்கு நடைபெற்றது. தேவார பாராயணமும், தலைவர் முன்னுரையும் முடிந்தவுடன் திரு.வி. உலகநாத முதலியாரவர்கள் "நல்லாரிணக்கம்" என்னும் பொருள் பற்றிப் பட்டினத்தடிகள் பாடலை ஆதாரமாகக் கொண்டு எளிய நடையில் அனைவரும் நன்கு உணருமாறு பல மேற்கோள்களுடன் செவ்வனே விரிவுரை நிகழ்த்தினார்கள். பிறகு திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் (திருக்குறள் விளக்க ஆசிரியர்) "இறை வழிபாடு" என்பது பற்றி எண்ணிறந்த திருக்குறள் சித்தாந்த சாத்திர மேற்கோள்களோடு ஆன்மாக்களுக்கு இறை வழிபாடு இன்றியமையாது வேண்டப்படும் என்றும், எத்துணை உயரிய ஞானியாயினும் இறை வழிபாட்டைக் கைவிடுதல் கூடாதென்றும் மிக அழகாக அனைவர் உள்ளத்திலும் நன்கு பதியும்படி விளக்கினார்கள். பிறகு திரு. E. N. தணிகாசல முதலியாரவர்கள் (வக்கீல்) "சித்தாந்தம்" பத்திரிகையின் சிறப்பை விளக்கி அதற்கு எல்லோரும் ஆதரவு புரிய வேண்டுமென்று வற்புறுத்திச் சைவத் திருமுறைகளை மிகக் குறைந்த விலைக்கு அச்சிட்டுத் தருவதற்காக ஐக்கிய நாணய சங்கம் ஏற்படுத்தற்குரிய வழியை விரித்துக் கூறினர். வேளாளத் தேனாம்பேட்டை வாசிகள் இயன்ற உதவி புரிவதாக ஆர்வத்துடன் ஒப்புக்கொண்டனர். அவைத் தலைவர் பின்னுரையோடு வந்தனோபசாரம் வாழ்த்து முதலியன நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது. இது போலப் பல ஊர் வாசிகள் முன் வந்து மாதக்கூட்டங்கள் நடத்திவைத்து,சமாஜத்தின் நோக்கங்கள் இனிது கைகூடுமாறு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று இச் சமாஜத்தினர் கேட்டுக்கொள்ளுகின்றனர்.

ம. பாலசுப்பிரமணியம்,
காரியதரிசி.

18717

### மதுரை

27. திரு. M. T. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், ஜமீன்தார், உத்தமபாளையம்.
28. திரு. மங்கல கவுண்டர் அவர்கள்.
29. திரு. R. S. பதி அவர்கள்.

### இராமநாதபுரம்

30. திரு. கதிரேசஞ் செட்டியார் அவர்கள், வித்துவான், மகிபாலன்பட்டி.
31. திரு. சொக்கலிங்க ஐயா அவர்கள், வித்துவான், காரைக்குடி.
32. திரு. A. L. A. R. நாராயணச் செட்டியார் அவர்கள்.

### திருநெல்வேலி

33. திரு. ராவ் சாஹிப் V. P. காந்திமதி நாதம் பிள்ளை அவர்கள் பீ. ஏ., பீ. எல்., அம்பா சமுத்திரம்.
34. திரு. T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள் பீ. ஏ., பீ. எல். M. L. C.
35. திரு. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் பீ. ஏ., பீ. எல்., தூத்துக்குடி.

### பெங்களூர்

36. திரு. ஆறுமுக முதலியார் அவர்கள், நால்வர் பவனம்.

### புதுக்கோட்டை

37. திவான் பஹதூர் - T. N. முத்தைய செட்டியார் அவர்கள், இராமச்சந்திரபுரம்.
38. திரு. S. P. சிவஞான முதலியார் அவர்கள் பீ. ஏ. பீ., எல். *Judge*, புதுக்கோட்டை.

### திருவனந்தபுரம்

39. திரு. இலக்குமணப்பிள்ளை அவர்கள் பீ. ஏ.

### புதுச்சேரி

40. திரு. கிரந்தே சிவசங்கரச் செட்டியார் அவர்கள்.
41. திரு. A. V. முத்தைய செட்டியார் அவர்கள்.
42. திரு. பழனிசாமிப் பிள்ளை அவர்கள்.


| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | ரூ. | 1-8-0. | தபாற்கூலி இல்லை. |
| வெளிநாடு | ,, | 2-0-0. | |

**விளம்பர விகிதம்**

| | | | | |
|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ. | 10 | 0 | 0 |
| அரைப்பக்கம் | ,, | 5 | 0 | 0 |
| கால்பக்கம் | ,, | 3 | 0 | 0 |


---

'ஆதி வாழிய அஞ்செழுத் தோடுவெண்
பூதி வாழிய புண்ணியர் வாழிய
நீதி வாழிய நீள்புவி வாழிய
கோதில் சைவக் குலமிக வாழியே.'


Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Edited and Published by Mani Thirunavukkarasu Mudaliar for the Saiva Siddhanta Maha Samajam.